
வார இதழ்
# தேசியம்
THESIYAM தේසියම්
www.thesiyamnews.com




மலர் - 02 இதழ் - 22 07.06.2024 - 14.06.2024 வள்ளுவர் ஆண்டு 2054 பக்கங்கள் 12 ஊக்குவிப்பு : ரூ.80.00

# தேர்தலைப் புறக்கணிப்பதும் பொதுவேட்பாளரும் ஒன்றல்ல!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொய் உரைக்கின்றது.



பக்கம் 10

## முன்னாள் எம்.பி சுரேஷ் விளக்கமளிப்பு.

# தமிழீழத் தேசிய உலகிற்கு தமிழ் பொதுவேட்பாளர் தேவை

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் உருத்திரகுமாரன்



தமிழீழத் தேசியத்தை உலகிற்கு எடுத்தியம்புவதற்கு தமிழ் பொதுவேட்பாளர் தேவை என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் அதிபர் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் விடயம் தொடர்பாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் நிலைப்பாடு பற்றி விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், "1972 அரசியல் அமைப்புச் சட்டத்திற்கோ 1978 அரசியல் அமைப்புச் சட்டத்திற்கோ தமிழர்களாகிய நாங்கள் பங்குதாரர்கள் அல்ல, அதற்கு நாங்கள் சம்மதமும் கொடுக்கவில்லை எனவே அது எங்களைக்

பக்கம் 10

# தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயம்

பக்கம் 10



## கல்லில் நார் உரிப்பதை போன்றதே!

வினோ எம்.பி தெரிவிப்பு!

பக்கம் 10



## எங்களுக்குச் சரிவராது! உசுப்பேற்றி எதையும் செய்ய முடியாது.

சீ.வீ. கே.சிவஞானம் தெரிவிப்பு!


பக்கம் 10



## ஒரு விஷப் பரீட்சையாகும்!

சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு!

தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



# உள்ளகப் பொறிமுறையைத் திணிக்க முயல்தல்.

எதிர்பார்ப்புக்களை மீறிய தாமதிக்கும் நீதி என்பது தமிழர்களுக்கான உரிமைப் போராட்டத்தினை மேலும் மேலும் தீர்வின்றி நகர்த்திவருகிறது என்பது இனப்பிரச்சினையின் அரசியல் வாரலாறாகும்.

இலங்கையில் நீண்டகாலமாக பாதிக்கப்பட்ட, பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும் தமிழ் மக்கள் போர்க் குற்றங்கள், இனப்படுகொலைக்கான பொறுப்புக் கூற வேண்டிய தரப்பு உள்ளகப் பொறிமுறையை கையாள முடியாது. அத்துடன் உள்ளகப் பொறிமுறை மூலம் தமிழர்களுக்கு நீதி கிடைக்காது என்பதானாலேயே சர்வதேச பொறிமுறை ஊடான நீதியான விசாரணை வேண்டுமேன கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

அந்தவகையில் நாட்டில் நிகழ்ந்த இறுதிக்கட்ட யுத்தத்தில் நடைபெற்ற யுத்தக் குற்றங்களின் உண்மைகளை கண்டறிந்து நீதிக்கான பொறிமுறையினை உருவாக்குவது முக்கியமானதாகும். அதே போன்று காணாமல்போனோர் தொடர்பில் ஆராய்ந்து உண்மைகள் வெளிப்படுத்தப்படுவதும் நீதி நிலைநாட்டப்படவதும் முக்கியமாகும்.

கடந்த காலங்களில் பேச்சுவார்த்தைகள் என்றும் ஒப்பந்தங்கள் என்றும் அரங்கேற்றப்பட்ட இலங்கையின் ஆளும் அரசாங்கங்களின் காலத்தை இழுத்தடிக்கும் போலி நாடக முயற்சியாக தற்போதைய அரசாங்கத்தின் வெளிக்காட்டல்களும் காணாமல் போகும் என்பதில் மறை கருத்தில்லை. இதனை தமிழர்கள் நம்பத் தயாரில்லையானாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அதுவே உண்மை.

இந்த நிலையில் உள்ளகப் பொறிமுறையிலேயே தீர்வுகள் காணப்படவேண்டும் வெளியகத் தலையீடுகள் இனங்களுக்கிடையிலான துருவப்படுதலை அதிகரிக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சில தினங்களுக்கு முன்னர் கருத்து வெளியிட்டிருக்கிறார். அத்துடன், வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவகம், உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பிலும் அவர் கருத்துகளை வெளியிட்டிருக்கிறார். அதே நேரத்தில் தமிழ் மக்களும் ஏனைய சிறுபான்மை மக்களும் நியாயமானதொரு நிலைப்பாட்டுக்கு வரவேண்டும் என்றும் அழைப்பு விடுத்திருக்கிறார். இவருடைய அழைப்பு ஏதோ வரலாறு தெரியாதவகையிலேயே அமைந்திருப்பதாகச் சொல்லமுடியும்.

இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற சம அந்தஸ்தான வாழ்க்கை என்பது எட்டாக்கனியாக இப்போதும் அது தொடர்கிறது என்பதே வரலாறு. காரணம் டி.எஸ்.சேனநாயக்கா தொடக்கம் ரணில் விக்கிரமசிங்க வரை நாடு தொடர்பாக ஒரு முகம், ஒரு கொள்கை இல்லாமையினாலேயாகும். நம் நாட்டின் பல்லினத் தன்மையை ஏற்றுக் கொள்ளும் மனோபாவம் யாரிடமும் இருக்கவில்லை அதனைப் பல்வேறு உதாரணங்கள் கொண்டு அறியமுடியும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஐக்கிய நாடுகள் சபையிடமும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிடமும் பதின்மூன்று போதாது பதின்மூன்று பிளஸிற்குச் செல்வேன் என்றார். அடுத்து வந்த ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச எதைப்பற்றியும் பேசத் தயாரில்லை என்ற கோதா யில் நாட்டில் இனப்பிரச்சினையுமே இல்லை என்றவகையில் கருத்துக்களை வெளியிட்டார். பின்னர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் உள்ளகப்பொறிமுறையில்தான் தீர்வு என்றார். புலம்பெயர் அமைப்புகளுடன் பேசுவேன் தீர்வைக்காண்பேன் என்றார். அதனையே இப்போதைய வெளிவிவகார அமைச்சரும் முன்வைக்கிறார். உள்நாட்டையும், சர்வதேசத்தையும் தம்வசப்படுத்தி தனது இலக்கை அடையும் பக்குவம் கொண்டதாக இலங்கை நாடு நகர்வதையே இது காட்டுகிறது.

தமிழ் மக்கள் தொடர்பாக, வடக்கு, கிழக்கு நிலம் தொடர்பாக, தமிழ் மொழியின் பாவனை தொடர்பாக, ஆறு தசாப்த அகிம்சை, ஆயுத வழிப் போராட்டம் தொடர்பாக எவ்வித புரிதலும் தெளிவும் பெறும் எண்ணம் இன்னும் ஆட்சியாளர்களிடம் இல்லை என்பதனையே இது தெளிவுபடுத்துகிறது. இவர்களா தமிழர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு தருவார்கள் என்ற எண்ணத்தையே இது கொண்டுவருகிறது.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் எப்படி, எதற்காக உருவாக்கப்பட்டது. புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் உருவாகியது. மாகாணசபை முறைமை உருவாகியது. மாகாணசபைத் தேர்தலும் நடந்தது. 5 வருடங்களுக்கு மேலாக மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாமல் குட்டி ஜனாதிபதிகளான ஆளுநர்களின் கைகளிலேயே மாகாணங்கள் இருக்கிறது.

தமிழ் மக்கள் கிடைக்காத ஒன்றுக்காக பல தசாப்தங்களாக பிரயத்தனப்படுகிறார்கள் என்றே நம் போராட்ட வரலாறு தெரிந்தோர் கேள்விகளை அடுக்குகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வுகள் வருகையில், காலங்காலமாக இலங்கையின் வடக்கு, கிழக்கு தமிழர்கள் அனுபவித்து வருகின்ற இன்னல்கள் முடிவுக்கு வந்துவிடும் என்றே ஒவ்வொரு வருடத்திலும் தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் யுத்தம் நடைபெற்ற காலங்களைவிடவும் அதிக நெருக்குதல்கள் அதிகரிக்கின்றதே தவிர வேறு எந்த பிரயோசனமும் ஏற்பட்டுவிடவில்லை.

இலங்கையில் சிறுபான்மைச் சமூகம் என்றொன்று இல்லை. அதற்குப் பிரத்தியேகமான பிரச்சினைகள் ஏதுமில்லை என்ற சிந்தனை கொண்ட பெரும்பான்மை சிங்களவர்கள் யுத்தம் மௌனிக்கப்பட்டு 15வருடங்கள் கடந்தும் தமிழர்களுக்குத் தீர்வைக் கொடுக்கத் தயாரில்லாமலேயே காலத்தைக் கடத்த முயல்வது எந்தவகையான நடைமுறை என்பது புரியாமலேயே இருக்கிறது என்றில்லை.

நீடித்த சமாதானத்தை நாட்டுக்குள் ஏற்படுத்திக்கொள்ள, தேசிய நிறுவனங்களினூடான பொறுப்புக்கூறல், மறுசீரமைக்கப்பட்ட நீதி மற்றும் அர்த்தமுள்ள நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. ஆனால், அதற்கான எந்தவிதமான ஏதுக்களையும் அவர்கள் ஏறப்படுத்த முயலவில்லை. தவிர அதனை மேலும் சிக்கலுக்குள்ளாக்கும் தொல்பொருள் இடங்கள் என்ற போர்வையில், தமிழர்களின் மத உரிமையை மீறுதல், காணி உரிமையைப் பறித்தல், நினைவு கூரல்களைத் தடுத்தல், குடியேற்றங்கள் போன்ற செயற்பாடுகளிலேயே ஈடுபட்டு வருகின்றனர்.

பொருளாதார அபிவிருத்தி, விவசாயத்துறை மேம்பாடு குறித்துக் கவனமெடுக்கும் இலங்கை அரசாங்கம் இலங்கையின் தமிழ் மக்களின் பிரச்சினையில் அக்கறையைச் சரியான முறையில் காண்பிக்கவில்லை. சர்வதேசத்தினையும் மனிதாபிமான நீதி மற்றும் சமவாயங்களையும் கவனத்திலெடுக்கவில்லை. என்று குற்றச்சாட்டுக்களை தமிழர்களால் முன்வைக்க மாத்திரமே முடிகின்றது. நீதியான, நியாயமான, உண்மையான எந்தவொரு முன்னெடுப்பையும் காணாமல் உள்ளகப் பொறிமுறை சாத்தியமாகுமா என்பதுவே கேள்வி இந்தநிலையில் இது ஒரு ஏமாற்று வேலையாக,திணிக்க முயல்வதாகவுமே இருக்குமேயன்றி வேறொன்றிலை.

அந்தவகையில் நோக்கினால் உள்ளகப் பொறிமுறை பற்றிப் பேசுவதற்கு எந்த விதத்திலும் அருகதையற்றவர்களாகவே பெரும்பான்மையினரையும், அரசாங்கத்தையும் பார்க்க முடியும் எனலாம். அத்துடன், சர்வதேசத்தினை ஏமாற்றும் செயற்பாட்டில் தொடர்ச்சியாக வெற்றிகண்டுவரும் ஒரு அரசாங்கமானது காலத்தினை இழுத்தடித்துக் கொண்டு தமிழர்களின் அடுத்த, அடுத்த சந்ததியினரையும் ஏமாற்றும் செயற்பாடாகவும் கொள்ளலாம்.

ஆயுத ரீதியான யுத்தமும் அரசியல் ரீதியான முயற்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திற்கும் இப்போதைய வெறும் அரசியல் ரீதியான முயற்சிகளுக்கும் வேறுபாடு இருந்தாலும் முயற்சி தொடர்கின்றது என்றே சொல்ல வேண்டும். ஆனால் இம் முயற்சிகள் பலனற்றதாகிப் போகின்ற நிலைமையே கவலைக்குரியது.

காலங்கடந்த ஞானம் எவ்வளவுக்கு வீணோ அவ்வாறே காலங்கடந்த நீதியும் நியாயமும் அமைந்திருக்கும் என்பதற்கு இலங்கையின் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வும் அமையும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. இதனை மாத்திரமே தமிழர்கள் உணரவேண்டும்.

**ஆசிரியர்**

# வடக்கு மாகாணத்தில் அதிகளவானோர் பல்கலைக்கு விண்ணப்பிக்க தகுதி!

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தகவல்.



கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களே அதிகளவில் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். அதற்கமைய 68.76 சதவீதமானோர் இவ்வாறு வடக்கில் சிறந்த சித்திகளை பெற்றுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு பரீட்சை பெறுபேறுகளில் முன்னேற்றம் காணப்படுகிறது. அதற்கமைய 64.33 சத வீதமானோர் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர்.

எவ்வாறிருப்பினும் இந்த 64 சதவீதத்தில் மாணவிகளிலும் பார்க்க மாணவர்கள் சித்தியடைந்துள்ள வீதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மாணவர்களில் 56 சத வீதமானோரும், மாணவிகளில் 70.1 சதவீதமானோரும் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர்.இது அவதானம் செலுத்த வேண்டிய நிலைமையாகும். நாடளாவிய ரீதியில் சகல பாடத்துறைகளிலும் 3ஏ சித்திகளைப் பெற்ற மாணவர்கள் 3.9 சதவிதமாகப் பதிவாகியுள்ளது. அதற்கைய 10484 பேர் இவ்வாறு 3ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

உயிரியல் தொழில்நுட்பத்துறையில் பரீட்சைக்கு தோற்றியவர்களே அதிகளவில் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர். 76.21 சதவீதமானோர் உயிரியல் தொழில்நுட்பத்துறையில் சிறந்த பெறு பேற்றைப் பெற்றுள்ளனர். குறிப்பாக வட மாகாணத்திலேயே அதிகளவானோர் பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெறும் வகையில் சிறந்த சித்திகளைப் பெற்றுள்ளனர் இவ்வாறு வடக்கில் சிறந்த சித்திகளைப் பெற்றுள்ளனர். 10.04 சதவீதமானோர் எந்தவொரு பாடத்திலும் சித்தி பெறவில்லை. இதன்படி 27970 மாணவர்கள் இவ்வாறு எந்தவொரு பாடத்திலும் சித்திபெறவில்லை என்றார்.

# சிறிலங்கா அதிபர் தேர்தலைப் புறக்கணிக்குக.

## முன்னணியின் பிரசாரம் ஆரம்பமாகியது.



ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்கக் கோரி தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரால் கடந்த சனிக்கிழமை யாழ் மத்திய பேருந்து நிலையத்தில் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டது. கடந்த சனிக்கிழமை மாலை மூன்று மணியளவில் குறித்த துண்டுப்பிர சுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

சிறிலங்காவின் ஒற்றையாட்சி அரசியலமைப்பு நீக்கப்பட்டு சமஷ்டி அரசியலமைப்பு உருவாக்கப்படுவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும் வரை ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்போம் என்ற தொனிப்பொருளில் மக்களிடையே துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஸ், முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் என பலரும் கள கலந்து கொண்டிருந்தனர்

# தமிழ்ப் பொது வேட்பாளர் காலத்தின் தேவை

## புளொட் மத்திய குழு தீர்மானம்.



தமிழ்ப் பொது வேட்பாளர் கோரிக்கை பேசு பொருளாக ஆரம்பித்த காலத்தைவிட இன்றைய காலகட்டத்தில், பல்வேறு தரப்பினரது அயராத முயற்சிகளால், அக் கோரிக்கையின் ஆதரவுத் தளம் அதிகரித்து வருவதோடு கோரிக்கையின் நியாயத்தன்மையும் பரந்த அளவில் உறுதிப்படுத்தப்பட்டு வருகிறது என்று ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) தெரிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை (04.06.2024) ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் த.சித்தார்த்தன் தலைமையில் நடைபெற்ற கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் தமிழ்ப் பொது வேட்பாளர் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தொடர்பில் அக்கட்சியின்செயலாளர் ம.பத்மநாதன் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

மேலும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளையும், சமூக வாழ்வின் எதிர்பார்ப்புகளையும், நாளாந்தம் முகம் கொடுத்து வரும் நெருக்கடிகளையும், தென்னிலங்கை அரசியல் சமூகத்தின் தொடர்ச்சியான ஏமாற்றுத்தனங்களையும் உறுதியாக வெளிப்படுத்தக்கூடிய வகையில், ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான தீர்மானத்தை ஜனநாயக மக்கள் விடு தலை முன்னணியினராகிய நாம் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஏனைய அங்கத் துவக் கட்சிகளுடன் இணைந்து ஏற்றுக் கொண்டதோடு அதனை முன்கொண்டு செல்வதற்கான முழு ஆதரவினையும் வெளிப்படுத்தியிருந்தோம்.

அதே நேரத்தில், இத் தீர்மானத்தை ஒரு சில அரசியல் கட்சிகளினதும், ஒரு சில சமூக செயற்பாட்டுக் குழுக்களினதும் தீர்மானமாகவன்றி, தமிழ் தேசியப் பரப்பில் இயங்கும் அனைத்துத் தரப்பினரதும் ஏகோபித்த கோரிக்கையாக முன்னெடுப்பதன் மூலம், தமிழ் மக்களின் அபிலாசைகளை தீர்மானங்களை மிகவும் காத்திரமான முறையில் வலுமிக்கதான முன்னெடுக்க முடியும் என்பதையும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம்.

தமிழ்ப் பொது வேட்பாளர் கோரிக்கை பேசு பொருளாக ஆரம்பித்த காலத்தைவிட இன்றைய காலகட்டத்தில், பல்வேறு தரப்பினரது அயராத முயற்சிகளால், அக் கோரிக்கையின் ஆதரவுத் தளம் அதிகரித்து வருவதோடு கோரிக்கையின் நியாயத்தன்மையும் பரந்த அளவில் உறுதிப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலைமை மேலும் சிறப்புறவும், தென்னிலங்கையிலும் சர்வதேசத்திலும் அக் கோரிக்கையில் உள்ள நியாயங்களை விஞ்ஞானபூர்வமாக உறுதிப்படுத்தவும், இயன்றளவில் மிகப் பெரும்பான்மையான தமிழ்த் தேசியச் செயற்பாட்டு சக்திகளுடன் இணைந்து முன்கொண்டு செயற்படுவது, தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கு அவசியமானது என்பதை எமது கட்சியின் மத்திய குழுவின் உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் ஏற்றுக் கொண்டதோடு அதனை முன் கொண்டு செல்வதற்கும், அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# விடுதலைப்புலிகள், தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

## உட்பட 15 அமைப்புக்களின் சொத்துக்களும் நிதிகளும் முடக்கம்!



இலங்கை அரசு 15 தீவிரவாத அமைப்புக்களின் சொத்துக்களை முடக்குவதாக அறிவித்துள்ளது. இது தொடர்பில் விசேட வர்த்தமானி அறி வித்தல் வெளியாகியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரட்ண இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார். 15 தீவிரவாத அமைப்புக்கள், அந்த அமை ப்புகளுடன் தொடர்புடைய 210 பேரின் சொத்துக்கள், நிதிகள், பொருளாதார வளங்களைச் செயல் இழக்கச் செய்வதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு, தமிழர் புனர்வாழ்வுக்கழகம், தேசிய தவ்ஹீத்ஜமாத் உட்பட பல அமைப்புகளின் நிதிகளும் சொத்துக்களும் முடக்கப்பட்டுள்ளன என்று வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் எனவும், பயங்கரவாதிகளுக்கு நிதி உதவி செய்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்ட 113 பேரின் பணத்தையும், சொத்துக்களையும் முடக்குவதாகவும் அறிவிப்பு வெளியாகியுள்ளது.



# தியாகி சிவகுமாரன்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலகட்ட களச்செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த வேளை சிறிலங்கா காவல்துறையால் சுற்றி வளைக்கப்பட்ட தருணத்தில் சயனைட் அருந்தி 05.06.1974 அன்று வீரச்சாவைத் தழுவிக்கொண்ட முதற் தற்கொடையாளி தியாகி பொன். சிவகுமாரன்.

புரட்சியும் எழுச்சியும் இளைஞர் சமூகத்திடமிருந்துதான் தோற்றம் பெறுகின்றன. ஆயுதம் தாங்கிய ஈழ விடுதலைப் போராட்டத்தின் தோற்றுவாயில் அவனும் ஒருவன்.

ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப கர்த்தா அவன்தான். சயனட் அருந்தி முதன் முதலில் மரணமான போராளியும் அவன் தான்.

எதிரியிடம் உயிருடன் பிடிபடக் கூடாது எனும் உயரிய கோட்பாட்டை தனக்கு தானே வகுத்து, வரித்து, சிறிலங்கா காவல்த்துறையால் துரத்தப்படும் போது தோட்ட வெளிகளால் ஓடிக் கொண்டிருந்தான் அவன். மரவள்ளித்தடி குத்திய காயத்தால் அவன் வீழ்ந்து விட்டதால் சிறிலங்கா காவல்த்துறை அவனை நெருங்கி விட்டது. இனித் தப்ப முடியாது என்பதை நொடிப் பொழுதில் முடிவெடுத்த தியாகி சிவகுமாரன் தயாராகத் தன் பாதுகாப்புக்கு வைத்திருந்த சயனைட்டை அருந்துகின்றான்.
வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டவன் அங்கு தனது மூச்சை நிறுத்திக் கொண்டான். ஈழப்போராட்டத்தில் சயனைட்டை அறிமுகம் செய்து புதிய வரலாற்றைத் தொடக்கி வைத்தான் தேச விடுதலைக்காய் முதல் களப்பலியாகி இளைஞர்களின் இதயத்தைக் கொள்ளை கொண்டான்.

பிற்காலத்தில் அவனது சயனைட் கலாசாரத்தை இனவிடுதலைக்கான கள ஆயுதமாக வரித்துக் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், அந்தப் பாதுகாப்புக் காவலரணில் தன்னை தமிழ்த் தேசத்தின் விடுதலைப் பேரியக்கமாக விஸ்வரூபம் எடுத்துக் கொள்ளச் செய்தது.

தன் இன விடுதலைக்காக, அந்த விடுதலைக்காகப் போராடும் தன் இயக்கத்தைப் பாதுகாப்பதற்காக, அதன் மூலம் தன் இனத்தைக் காப்பதற்காக, எதிரியிடம் உயிருடன் பிடிபடக் கூடாது என்பதற்காக, தன்னுயிரை ஒறுத்து ஈகம் செய்வது தற்கொடையாவது - தியாகத்தின் உச்சம்.

அந்த மார்க்கத்தை நடைமுறையில் செய்து காட்டி, ஈழத் தமிழ் இளை ஞர்கள் மனதில் சுதந்திரத் தீயையும், தற்கொடை உணர்வையும் ஊட்டிய போராளி அவனே.

தியாகி சிவகுமாரின் மறைவு பற்றி "தேசத்தின் குரல்" அன்ரன் பாலசிங்கம் எழுதுகையில் "விடுதலை உணர்வு மிக்க துணிச்சலும் கொண்ட ஒரு மகத்தான வீரனை இழந்து தமிழீ ழம் துயரில் ஆழ்ந்தது" என்றார்.
சிவகுமாரனை நினைவு கூருவதன் மூலம் தமிழ் தேசிய அரசியல் வரலாற்றையும் அதற்கு பங்களித்தவர்களையும் நாம் நினைவு கூரு கின்றோம். தமிழ் மக்களுக்கெதிரான சிங்களத்தின் கொடுமைகளுக்கும், அநீதிகளுக்குமாக மட்டும் சிவகுமாரன் போராடவில்லை.

தமிழ்ச் சமூகத்திற்குள் புதைந்திருந்த சமூக அடக்குமுறைகளைப் பொசுக்கும் முயற்சிகளிலும் அவர் பின் நிற்கவில்லை. சாதியம், பெண் அடக்குமுறைப்போக்கு, மணக் கொடை போன்ற சமத்துவ வாழ்வுக் குப் புறம்பான போக்குகளையும் துணிந்து நின்று எதிர்த்தவன்.

மாணவர்களுக்கு முன் உதாரணமான முதற் தற்கொடையாளர் தியாகி பொன். சிவகுமாரன் வீரச்சாவடைந்த நாளான ஜூன் 05 ஆம் திகதியை தமிழீழ மாணவர் எழுச்சி நாளாகப் பிரகடனப்படுத்த முற்பட்ட போது, ஜூன் 05 ஆம் திகதி சர்வதேச சூழல் தினம் என்பதால் உலக ஒழுங்குடன் இணைந்து பயணிக்க வேண்டியதை கருத்தில் கொண்ட தமிழீழ விடு தலைப் புலிகள் அமைப்பு ஜூன் 06 ஆம் திகதியை தமிழீழ மாணவர் எழுச்சி நாளாகப் பிரகடனப்படுத்தியதுடன் அத்தினம் நினைவு கூரப்பட்டும் வருகின்றது.





# கிளிநொச்சி வீரர்கள் திட்டமிட்ட புறக்கணிப்பு!

## நிதியின்மையை காரணம்காட்டி வடக்கு அதிகாரிகள் தப்பிப்பு.

நிதி இன்மையை காரணம் காட்டி நீர் கொழும்பில் இடம் பெற்ற தேசிய கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டிக்கு கிளிநொச்சி வீரர்கள் இருவரை அழைத்துச் செல்லாத விடயம் குறித்து வடக்கு விளையாட்டு ஆர்வலர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி மலையாளபுரம் கிராமத்தைச் சேர்ந்த புதிய பாரதி விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த இரு வீரர்கள் கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் கரைச்சி பிரதேச செயலக பிரிவு, கிளிநொச்சி மாவட்டம், வடக்கு மாகாணம் போட்டிகளில் பங்குகொண்டு வெற்றியீட்டியிருந்தனர்.

இவர்களுக்கான தேசிய மட்டப் போட்டிகள் கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் நீர்கொழும்பில் இடம்பெற்றது.

இந்நிலையில் வடக்கு மாகாணத்தில் சம்பியனாகிய வீரர்கள் இருவரும் குறித்த போட்டிக்கு கிளிநொச்சியிலிருந்து உரிய அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்படவில்லை.

இவ் வீரர்கள் ஏன் தேசிய போட்டிக்கு அழைத்துச் செல்லப்படவில்லை என சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் வினவிய போது உரிய வீரர்களை போட்டிக்கு கொண்டு செல்வதற்கும் மூன்று தினங்கள் பராமரிப்பதற்குமான நிதி வசதியின்மை காரணமாக தேசிய போட்டிக்கு வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு வீரர்களை அழைத்துச் செல்ல முடியாது போய்விட்டது எனத் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தேசிய போட்டிக்குச் செல்வது என்பதே சாதனைக்குரிய விடயம் இந்த நிலையில் வடக்கு மாகாணத்தை பிரதி நிதித்துவப்படுத்தி கடற்கரை கரப்பந்து போட்டிக்கு வீரர்களை அழைத்துச் செல்லாமையானது விளையாட்டு ஆர்வலர்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தி யுள்ளதுடன் குறித்த வீரர்களுக்கான நிதி வசதியின்மை என்பதற்கு அப்பால் குறித்த நிதியினை பெறுவதற்கான முயற்சிகள் கூட உரிய நிர்வாகத்தால் மேற்கொள்ளப்படவில்லை என குற்றம்சாட்டுகின்றனர்.

# வேலணையில் புகைத்தலுக்கு எதிரான கூட்டமும் நடைபவனியும்!

சர்வதேசப் புகைத்தல் மற்றும் மது ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு, வேலணைப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில், "போதையற்ற தேசத்தைக் கட்டியெழுப்புவோம்" எனும் தொனிப் பொருளிலான விழிப்புணர்வு நடை பவனியும். கூட்டமும் வேலணைப் பிரதேச செயலாளர் க.சிவகரன் தலைமையில் வேலணையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

நிகழ்வில் வேலணை உதவிப் பிரதேச செயலாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோ கத்தர் சமூர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர், வேலணை சமூர்த்தி வங்கி முகாமையாளர், சிறைச்சாலை அபிவிருத்தி உத்தியோகத்தர், உளவளத் துணை உத்தியோகத்தர், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுதாய மட்ட மற்றும் பிரதேச மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் தலையீட்டைத் தடுக்கமுடியாது!

## அலி சப்ரிக்கு சட்டத்தரணி தவராசா பதிலடி.



ஒரு நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து சென்றவர்கள்தான் அந்த நாட்டின் அரசியல், பொருளாதாரம் மற்றும் அடிப்படை விடயங்களில் பெரும் செல்வாக்கு செலுத்தும் சக்தியாக இருப்பர்.

வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி புலம்பெயர்ந்த தமிழர்கள் தொடர்பில் அண்மையில் பொறுப்பற்ற கருத்தை முன்வைத்துள்ளார் என்று ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா தெரிவித்துள்ளார்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் இந்த நாட் டின் அரசியலில் தலையிடக்கூடாது என்று அண்மையில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். இந்தக் கருத்தை, யாரைத் திருப்திப்படுத்த அவர் முன்வைத்தார் என்பது ஊகிக்க முடியாத ஒரு விடயம் அல்ல. பலஸ்தீனத்தின், ராபா நகர் மீது இஸ்ரேல் மேற்கொள்ளும் அடாவடித்தனங்களுக்கு எதிராக இன்று அனைவரது கண்களும் குவிக்கப்பட்டுள்ளன. இந்த அநீதிகளை உலகறியச் செய்ததில் பலஸ்தீனத்தில் இருந்து புலம்பெயர்ந்து சென்ற மக்களின் பங்களிப்பு மிகப்பெரியது. இந்த விவகாரத்தை வெளிவிவகார அமைச்சர் எவ்வாறு அணுகுவார் என்பதை அறிய விரும்புகின்றேன்.

பலஸ்தீனர்கள் மீதான இஸ்ரேலின் அத்துமீறல்களை பலஸ்தீன புலம்பெயர் மக்கள் கண்டும், காணாது சகித்துக் கொள்ளவேண்டும் என்று அவர் நினைக்கின்றாரா? இஸ்ரேலின் அத்து மீறல்களை ஏற்றுக்கொள்ளாத அமைச்சர் அலி சப்ரி, ஈழத் தமிழர்கள் விடயத்தில் மெத்தனமாக நடந்து கொள்வது எந்தவகையில் நியாயமானது?

தனக்குத் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளு மன்ற உறுப்பினர் பதவியை யும், பலம்மிக்க அமைச்சுப் பதவியையும் தந்தமைக்காக சிங்களத்தைத் திருப்திப்படுத்தும் வேலைகளை அவர் செய்துகொள்ளலாம். ஆனால் தமிழ் மக்கள் உரிமைகளின் மீதும். தமிழ் மக்களின் இருப்பின்மீதும், அபிலாஷைகள் மீதும், கனவுகள் மீதும் கை வைக்க அவருக்கு எந்த அதிகாரமும் கிடையாது.

இலங்கை பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருந்தபோது புலம்பெயர் தமிழர்களின் முதலீடும், பொருளாதார ஒத்துழைப்பும் தேவையாகவிருந்தது. ஆனால் புலம்பெயர் தமிழ் மக்கள் இந்த நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாது என்பது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

ஒட்டுமொத்த தேசியத்தின் குரலாக எப்போதும் புலம்பெயர் தமிழர்கள் இருப்பார்கள். விருப்பம் இல்லாவிட்டாலும் அந்தக் குரலை அனைவரும் செவிமடுத்துத்தான் ஆகவேண்டும் ஆக்கபூர்வமான அழுத்தம் மிக்க சக்தியாக புலம்பெயர் தமிழர்கள் ஈழத்து அரசியலில் தாக்கம் செலுத்திக் கொண்டே இருப்பார்கள் என்பதை இத்தகைய பொறுப்பற்ற அரசியல்வாதிகள் கருத்தில்கொண்டு செயற் பட வேண்டும் – என்றுள்ளது.

# நயினாதீவில் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவானது

யாழ் மாவட்டத்தில் நயினாதீவிலேயே கடந்த திங்கட்கிழமை காலை தொடக்கம் செவ்வாய் கிழமை காலை வரையான 24 மணி நேரத்தில் கூடுதலான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 24 மணி நேரத்தில் யாழ். மாவட்டத்தில் நயினாதீவில் அதிகூடிய மழை வீழ்ச்சியாக 58.8 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தினர் தெரிவித்தனர்.

குறித்த காலப் பகுதியில் யாழ், மாவட்டத்தில் யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் 43.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், நெடுந்தீவில் 43.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ். நகரப் பகுதியில் 34.6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், பருத்தித்துறையில் 32.0 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், திருநெல்வேலியில் 29.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.


## அன்பான வாசகர்களுக்கு..!

தேசியம் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.
அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம். பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்ப வேண்டிய முகவரி :

**No. 27, Kannathiddy Road, Jaffna. | Tel : 021 222 7557**

**E-mail : thesiyamnews@gmail.com | Whatsapp : +94 76 567 3339**


# வடக்கு எம்.பி.க்கள் மூவருக்கு ரணில் விசேட நிதி ஒதுக்கீடு!

## அரசியல் வட்டத்தில் சலசலப்பு!



யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக்காக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரு க்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்களின் பணிப்பின்பேரில் ஜனாதிபதி அலுவலகத்தால் விசேட நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாவட்ட செயலகத்தில் திட்டமிடல் பிரிவால் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

யாழ் மாவட்டத்தின் 7 பாராளுமன்ற உறுப்பினர்களில் இருவருக்கும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக்கும் விசேட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனுக்கு 146 திட்டங்களை யாழ்ப்பாண மாவட்டத்தின் 11 பிரதேச செயலர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்த 47 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் 97 திட்டங்களை யாழ்ப்பாண மாவட்டத்தின் 13 பிரதேச செயலர் பிரிவுகளில் நிறைவேற்றுவதற்காக 21,450 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் யாழ்ப்பாண மாவட்டத்தில் 14 திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 25 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இவருக்கு ஒதுக்கப்பட்ட நிதி எத்தனை பிரதேச செயலர் பிரிவுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்தவேண்டும் என்று இந்த 3 பாராளுமன்ற உறுப்பினர்களும் வலியுறுத்திவரும் நிலையில், ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் வழங்காது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த 3 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் விசேட நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளமை வடக்கு அரசியல் வட்டத்தில் சிறிய சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.



# நடுத்தர வயதினரின் அரசியல்?

அண்மையில் மருத்துவ நிபுணரான ஒரு நண்பர் கேட்டார்“ என்னுடைய பிள்ளை தான் ஏன் வெளிநாடு போகக்கூடாது என்று கேட்டால், அந்தப் பிள்ளைக்கு நீ ஏன் நாட்டிலேயே இருக்க வேண்டும் என்று நான் கூறுவதற்கு பொருத்தமான காரணம் ஏதும் உண்டா?” என்று.இந்தக் கேள்வி யாழ்ப்பாணத்தின் படித்த நடுத்தரவர்க்கப் பெற்றோர் பலர் மத்தியில் உண்டு.இக்கேள்விக்குப் பொருத்தமான விடை எத்தனை தமிழ் அரசியல்வாதிகளிடம் உண்டு?

பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஒரு புலப்பெயர்ச்சி அலை ஓடிக்கொண்டிருக்கிறது. சிங்கள மக்கள் மத்தியிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் ஆயிரக்கணக்கானவர்கள் புலம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். அண்மையில் மே 18ஐ முன்னிட்டு “தமிழ் மிரர்” பத்திரிகையின் கார்ட்டூனிஸ்ட் அற்புதமான ஒரு கார்ட்டூனை வரைந்திருந்தார். அதில் 2009 மே 18ஆம் திகதியன்று மகிந்த கட்டுநாயக்காவில் வந்திறங்கும் காட்சி ஒரு பெட்டிக்குள் வரையப்பட்டிருக்கிறது.மகிந்த விமான நிலையத்தில் இறங்கியதும் குனிந்து தரையைத் தொட்டு வணங்குகிறார். ஆனால் இப்பொழுது 15ஆண்டுகளின் பின், சிங்கள மக்கள் மத்தியில் இருந்து. புலம்பெயர்வோர் உலகின் வெவ்வேறு நாடுகளின் தலைநகரங்களில் உள்ள விமான நிலையங்களில் தரையிறங்கி அந்தந்த விமான நிலையங்களில் நிலத்தைத் தொட்டு முத்தமிடும் காட்சி மற்றொரு பெட்டிக்குள் வரையப்பட்டுள்ளது.

அதுதான் உண்மை. யுத்தத்தில் வென்றெடுத்த நாட்டைவிட்டு அதன் மக்களே வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். போர்க்காலத்தில் வெளியேறியது வேறுபொருளாதார நெருக்கடி காரணமாக வெளியேறுவது வேறு.பொருளாதார நெருக்கடிக்குள், தாய் நாட்டிலேயே நின்று, கடுமையாக உழைத்து தன்னையும் தனது தேசத்தையும் நிமிர்த்த வேண்டும் என்று ஓர் இளைய தலைமுறை ஏன் சிந்திக்கவில்லை?

குறிப்பாக, தமிழ் மக்கள் மத்தியில் இம்முறை வெளியேறிக் கொண்டிருப்பது இளையோர் மட்டுமல்ல.அதிக தொகையில் படித்தவர்கள், பட்டதாரிகள், முகாமையாளர்கள், தொழில் முனைவோர்,மருத்துவர்கள், தாதியர்கள், பொறியியலாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் என்று பல்வேறு வகைப்பட்ட துறைசார்ந்த நிபுணத்துவமுடையவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை கிடைத்த உத்தியோகப்பற்றற்ற புள்ளி விவரங்களின்படி, கனடாவுக்கும் லண்டனுக்கும் புலம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை பல்லாயிரம் என்று கணக்கிடப்படுகிறது. இது தவிர வழமையாக குடும்பங்களின் மீளிணைவு என்ற அடிப்படையில் மணமக்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு வெளியேறும் பெரும்பாலானவர்கள் தேர்தலில் வாக்களிக்கும் வயதுக்கு வந்தவர்கள். அதாவது ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவுசெய்யத் தேவையான வாக்காளர்கள் ஏற்கனவே வெளியேறி விட்டார்கள் என்று கூறலாமா?
“இந்த மண் எங்களின் சொந்த மண்” என்று பாடி, தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுத்த ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் இருந்து அந்த மண்ணை விட்டுப்போனால் போதும் என்று கருதும் ஒரு மனோநிலை, ஏன் மேலெழுகின்றது?

ஏனென்றால், தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையூட்டும் தலைமைகள் இல்லை. நம்பிக்கையூட்டும் முன்னுதாரணங்கள் குறைந்துவிட்டன. ஒருவர் மற்றவரை நம்பாத் ஒருவர் மற்றவரை சந்தேகிக்கின்ற் தான் ஒன்றும் செய்யாமல் இருந்து கொண்டு மற்றவரைக் குறைகூறுகின்ற் முன்னுக்குப் போகும் ஒருவரை யாரோ பின்னுக்கிருந்து இயக்குகிறார்கள் என்று சந்தேகிக்கின்ற அவநம்பிக்கை மிகுந்த ஒரு மக்கள் கூட்டமாக தமிழ்மக்கள் மாறி வருகிறார்களா? இந்த மண்ணிலேயே நின்றுபிடிப்போம், தமிழ்த் தேசத்தைக் கட்டியெழுப்புவோம் என்று நம்பிக்கையூட்டக்கூடிய தலைவர்கள் எத்தனை பேர் உண்டு?

ஒரு காலம் அரசியல் என்பது தியாகங்கள் செய்வது அர்ப்பணிப்புகள் செய்வது உயிரைக் கொடுத்துப் போராடுவது என்று இருந்த ஒரு சமூகத்தில், இப்பொழுது அரசியல் என்பது பெட்டி கைமாறுவத்யாரோடாவது “டீலுக்குப்” போவத் மதுச் சாலைகளுக்கான அனுமதிகளுக்கு விலை போவது என்று மாறிவிட்டதா? தமிழ்மக்கள் யாருக்கு வாக்களிக்கிறார்களோ, அவர்களையே சந்தேகிக்கிறார்கள். அவர்களையே திட்டுகிறார்கள்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் விக்னேஸ்வரனைச் சந்தித்தபோது, ஜனாதிபதி கூறிய ஒரு விடயத்தை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். தமிழ்மக்கள் மத்தியில் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் அரசியல் பேசுகிறார்கள். இளவயதினர் பொருளாதார விவகாரங்களில்தான் நாட்டமாக இருக்கிறார்கள் என்று அவர் கூறியிருக்கிறார். அது சரியா பிழையா என்பது தனியாகப் பார்க்கப்பட வேண்டும். ஆனால் தமிழ் அரசியல் சமூகத்தைக் குறித்த அவருடைய பார்வை அது.

ஒரு காலம் தமிழ் இளையோர் தமது உயிர்களைத் துச்சமாக மதித்து அரசியலை முன்னெடுத்தார்கள்.முழு உலகத்துக்கும் அபூர்வமான அனுபவமாக அந்தப் போராட்டம் அமைந்திருந்தது. அவ்வாறு மகத்தான தியாகங்களைச் செய்த ஒரு மக்கள் கூட்டம், மகத்தான பெருஞ்செயல்களைச் செய்த ஒரு மக்கள் கூட்டம், சித்தர்களையும் சான்றோர்களையும் மேதைகளையும் நிபுணர்களையும் மகத்தான படைப்பாளிகளையும் உற்பத்தி செய்த ஒரு சமூகம், இன்று அவிழ்த்துவிட்ட பாக்கு மூட்டை போல சிதறிக் கொண்டு போகின்றதா?

வடக்காய் கிழக்காய் சாதியாய் சமயமாய் கட்சிகளாய் குழுக்களாய்ஊர்ச் சங்கங்களுக்குள் எதிர் குழுக்களாய்ஆலய பரிபாலன சபைகளுக்குள் எதிரெதிர் குழுக்களாய் கட்சிகளுக்குள் அணிகளாய்ப் பிரிந்து நிற்கிறார்கள். புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில், இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் அரசியலிலும் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் அரசியலிலும் தமிழ் மக்கள் இரண்டாகி நிற்கிறார்கள். தமிழ்மக்கள் அதிகளவு தாங்களே தங்களுக்குள் மோதிக் கொண்டிருக்கிறார்கள். மூத்த பெரிய கட்சி நீதிமன்றத்தில் நிற்கிறது. கோவில்களின் ஆலய பரிபாலன சபைகளும் நீதிமன்றத்தில் நிற்கின்றன.

இவ்வாறு சிதறுண்டு சிறுமைப்பட்டுப் போயிருக்கும் ஒரு மக்கள் கூட்டத்தைப் பார்த்து உங்களுடைய இளைய தலைமுறைக்கு அரசியலில் நாட்டம் குறைந்து விட்டது என்ற பொருள்பட ரணில் கூற வருகிறாரா?

அவர் கூறிய மற்றொரு விடயம், தமிழ் பொது வேட்பாளருக்காக தமிழ் கட்சிகள் ஒன்றிணையப் போவதில்லை என்பது. தமிழ்ப் பொது வேட்பாளரின் விடயத்தில் குடிமக்கள் சமூகங்களுக்கு இடையே காணப்படும் அளவுக்கு ஐக்கியம் கட்சிகளுக்கு இடையே இல்லை என்பது உண்மைதான். தங்களுக்கு இடையே ஐக்கியப்பட முடியாத கட்சிகள் எப்படி மக்களை ஒரு தேசமாகத் திரட்ட முடியும்?

> “ தமிழ்ப் பொது வேட்பாளர் எனப்படுகின்றவர்,கட்சி கடந்த ஒருவர். சாதி சமயம் கடந்த ஒருவர். பிரதேச வேறுபாடுகளைக் கடந்த ஒருவர். தமிழ்மக்கள் மத்தியில் காணப்படும் எல்லா வேறுபாடுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் கடந்து அவர் தமிழ் ஐக்கியத்தின் குறியீடாக நிற்பார் என்று குடிமக்கள் சமூகங்கள் கூறுகின்றன.

– நிலாந்தன் –

கடந்த 15 ஆண்டுகால கட்சி அரசியலானது ஐக்கியத்தை கட்டியெழுப்பத் தவறிவிட்டது. குடிமக்கள் சமூகங்களின் தலையீட்டால்தான் ஓரளவுக்கு குறுகிய கால விவகார மைய ஐக்கியங்கள் சாத்தியமாகின. இப்பொழுதும் குடிமக்கள் சமூகங்கள்தான் கட்சிகளோடு இணைந்து ஒரு பொதுத் தமிழ் நிலைப்பாட்டை உருவாக்கி, அந்த அடிப்படையில் ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்கி, அதற்கூடாக பொது வேட்பாளரை முன்னிறுத்த முயற்சிக்கின்றன.

தமிழ்ப் பொது வேட்பாளர் எனப்படுகின்றவர், கட்சி கடந்த ஒருவர். சாதி சமயம் கடந்த ஒருவர். பிரதேச வேறுபாடுகளைக் கடந்த ஒருவர். தமிழ்மக்கள் மத்தியில் காணப்படும் எல்லா வேறுபாடுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் கடந்து அவர் தமிழ் ஐக்கியத்தின் குறியீடாக நிற்பார் என்று குடிமக்கள் சமூகங்கள் கூறுகின்றன.

தமிழ்ப்பொது வேட்பாளருக்காகத் திரட்டப்படும் வாக்குகள் ஒரு தேசத்துக்கானவை. ஒரு தனி நபருக்கானவை அல்ல.அங்கு ஒரு தனிநபர் வேட்பாளராக நிறுத்தப்படுவார். ஆனால் அவர் எந்த ஒரு கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்த மாட்டார். எந்த ஒரு சமயத்தையோ அல்லது சாதியையோ அல்லது பிராந்தியத்தையோ அவர் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடாது. தமிழ் மக்களை இப்பொழுது பிரித்து வைத்திருக்கும் எதனையும் அவர் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடாது. அவர் தமிழ்த் தேசிய ஐக்கியத்தின் குறியீடாக நிற்க வேண்டும். அவர் ஒரு பிரமுகராகக்கூட இருக்க வேண்டும் என்று இல்லை. அவர் தமிழ் மக்களின் ஐக்கியத்தைப் பிரதிபலிப்பார். அல்லது தமிழ் மக்களின் பொது நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் ஓர் அடையாளம். அவ்வளவுதான்.

அவ்வாறு தேர்தலில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர் அந்தத் தேர்தல்மூலம் தனக்குக் கிடைக்கும் பிரபல்யத்தையும் பலத்தையும் எதிர்காலத்தில் கட்சித் தேவைகளுக்காகப் பயன்படுத்தக் கூடாது என்ற ஓர் உடன்படிக்கை அவரோடு எழுதப்பட வேண்டும் என்று சிவில் சமூகங்கள் எதிர்பார்க்கின்றன. எனவே ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படக்கூடிய ஒரு தமிழ்ப்பொது வேட்பாளர் எனப்படுகின்றவர், தனக்காக வாக்குக் கேட்கப் போவதில்லை. ஒரு கட்சிக்காக வாக்குக் கேட்கப்போகவில்லை.தமிழ் ஐக்கியத்திற்காகத்தான் வாக்குக் கேட்பார். தமிழ்ப் பொது நிலைப்பாட்டுக்காகத்தான் வாக்குக் கேட்பார். தமிழ் மக்கள் ஒரு தேசமாக திரண்டுவிட்டார்கள் என்பதனை நிரூபிப்பதற்காக வாக்களிப்பது. அதாவது தமிழ் மக்கள் தங்களுக்குத் தாங்களே வாக்களிப்பது.

கடந்த 15 ஆண்டுகால தமிழ் வாக்களிப்புப் பாரம்பரியம் எனப்படுவது அரசியல்வாதிகள் தங்களுக்காக வாக்கச்சேர்க்கும் ஒரு பாரம்பரியம்தான். ஒவ்வொரு வேட்பாளரும் தனக்கென்று காசு செலவழித்து தனக்கென்று விசுவாசிகளை உருவாக்கி தனக்காக வாக்கு சேகரிக்கும் ஒரு கட்சி அரசியல் பாரம்பரியம். அதிலும் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின்கீழ் ஒரு கட்சிக்குள்ளேயே ஒரு வேட்பாளர் சக வேட்பாளரை போட்டியாளராகப் பார்ப்பார்.

ஆனால் பொது வேட்பாளர் என்று வரும்பொழுது அங்கே ஒவ்வொரு அரசியல்வாதியும் தனக்காகவோ தனது கட்சிக்காகவோ வாக்குச்சேர்க்கப் போவதில்லை.அவர்கள் தேசத்துக்காக வாக்குச்சேர்க்க வேண்டியிருக்கும். தேசத்துக்காக தமது சொந்தக் காசை செலவழிக்க வேண்டியிருக்கும். தேசத்துக்காக தமது உழைப்பை முதலீடு செய்ய வேண்டியிருக்கும். தேசத்துக்காக அர்ப்பணித்து உழைக்க வேண்டியிருக்கும். அதாவது தேசத்துக்காக வாக்கு சேர்ப்பது.

இது கடந்த 15ஆண்டுகளாகக் அருகி வரும் ஒரு போக்கு. இதைப் பலப்படுத்தினால் தமிழ் மிதவாத அரசியலில் நேர்மையானவர்கள், கண்ணியமானவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.அது தமிழரசியலை ஒரு புதிய தடத்தில் ஏற்றும். அதற்கான தொடக்கம்தான் தமிழ்ப்பொது வேட்பாளரை முன்னிறுத்தும் நோக்கத்தோடு கட்சிகளும் குடிமக்கள் சமூகங்களும் இணைந்த ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது. கட்சிகள் அதற்குத் தயாராக இருந்தால், குடிமக்கள் சமூகங்களின் வேலை இலகுவாகிவிடும்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஒரு கட்சிக்குள் நடந்த தேர்தலின் பின் விளைவுகள் தமிழ்மக்கள் சிறுமைப்பட்டு விட்டார்கள் என்பதை நிரூபித்தது. அப்படிதான், இந்த ஆண்டின் இறுதியில் நடக்கக்கூடிய ஒரு தேர்தல் தமிழ் மக்கள் சிதறிப் பலங்குன்றிப் போயிருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கக் கூடாது.அது தமிழ்மக்கள் ஒரு தேசமாகத் திரண்டுவிட்டார்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். அதற்குத் தமிழ்ப் வேட்பாளரைத்தவிர வேறு தெரிவு உண்டா?








# போஸ்னியாவில் உருவாகிய ஸ்ர்ப்ஸ்கா –SRPSKA குடியரசு :

## ஸ்ரெப்ரெனிகா இனப்படுகொலை மீதான ஐ.நா. தீர்மானம்!

முன்னாள் யூகோஸ்லாவியா மக்களுக்கு அவர்களின் சமத்துவ கொள்கைகள் கொண்டுவந்த அரசியலை சமாளிக்க முடியாமல் தற்போது இந்த பால்கன் (Balkan Countries) நாடுகள் திணறிக் கொண்டிருக்கின்றன.

தவறான ஆபத்தான இனவாத அடித்தளத்தை நம்பியிருக்கும் பால்கன் நாட்டின் தலைமைகளால் தொடர்ந்தும் குரோதமும், விரோதமும் தீவிரம் பெற்று வருகிறது.

1990களின் நடுப்பகுதியில் உலகை உலுக்கிய 'ஸ்ரெப்ரெனிகா' இனப்படுகொலையை அங்கீகரிப்பது தொடர்பாக தற்போது ஐக்கிய நாடுகள் தீர்மானம் முக்கியத்துவம் பெற்று வருகிறது.

இவ்வருட ஏப்ரல் மாதம் ஸ்ரெப்ரினிகா இனப்படுகொலையை (Srebrenica genocide) நினைவு கூரும் ஐ.நா தீர்மானத்தை பரிசீலனைக்கு ஏற்றுக்கொண்டதற்கு எதிராக செர்பியா அரசும், ஸ்ர்ப்ஸ்கா குடியரசுத் தலைவர்களும் கடும் எதிர்ப்பு பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

**– ஐங்கரன் விக்கினேஸ்வரா –**

அத்துடன் ஸ்ரெப்ரெனிகா இனப்படுகொலையை நினைவுகூரும் ஐ.நா தீர்மானத்திற்கு எதிரான பல ஆர்ப்பாட்டங்கள் செர்பியா, போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினாவில் நடந்துள்ளன.

அத்துடன் தண்டனை பெற்ற போர்க் குற்றவாளியான முன்னாள் செர்பிய ஜெனரல் ரட்கோ மலாடிக்கை ஆதரித்தும் மக்கள் கோஷமிட்டுள்ளனர்.

ஐநா தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு போஸ்னியா - செர்பியாவுடன் பாரிய பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

### ஸ்ர்ப்ஸ்கா குடியரசு அங்கீகாரம்:

ஸ்ர்ப்ஸ்கா குடியரசுயானது (Republic of Srpska) 1992 இல் போஸ்னியப் போரின் தொடக்கத்தில் போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினாவில் வாழும் செர்பியர்களின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட பிராந்தியமாகும்.

ஆயினும் இதுவரை ஐநாவால் அங்கீகாரமற்ற நாடாக உள்ளது. 1990களின் ஆரம்பத்தில் போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா கூட்டமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட செர்பியர்களின் வருகையால் 'ஸ்ர்ப்ஸ்கா குடியரசு' இதுவரை முழுமையான தேச உரிமை அற்று உள்ளது.

1995 ஆம் ஆண்டில் பால்கன் போரில் 'டேட்டன் ஒப்பந்தத்தை' தொடர்ந்து, ஸ்ர்ப்ஸ்கா குடியரசு போஸ்னியா - ஹெர்சகோவினா விற்குள் ஒரு சுயாட்சி பிரதேசமாக அங்கீகரிக்கப்பட்டது.

இன்றைய போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினாவில் செர்பிய மக்கள் தொகையில் பெரும்பாலானோர் ஸ்ர்ப்ஸ்காவிலேயே வாழ்கின்றனர்.

ஸ்ர்ப்ஸ்கா குடியரசு ஒரு பாராளுமன்ற சுயாட்சி அரசாங்கத்தைக் கொண்டுள்ளது. தேசிய சட்டமன்றம் நிறுவனத்திற்குள் ஆளும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

ஸ்ர்ப்ஸ்கா குடியரசு 64 நகராட்சிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

அதன் அரசியலமைப்பின் படி, ஸ்ர்ப்ஸ்கா குடியரசு அதன் சொந்தத் தலைவர், 83 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஸ்ர்ப்ஸ்கா குடியரசில் தேசிய சட்டமன்றம், நிர்வாக அரசாங்கம், காவல்துறை, நீதிமன்ற அமைப்பு, சுங்கச் சேவை, அஞ்சல் சேவை

> "1995 ஆம் ஆண்டில் பால்கன் போரில் டேட்டன் ஒப்பந்தத்தை தொடர்ந்து, ஸ்ர்ப்ஸ்கா குடியரசு போஸ்னியா – ஹெர்சகோவினா விற்குள் ஒரு சுயாட்சி பிரதேசமாக அங்கீகரிக்கப்பட்டது. இன்றய போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினாவில் செர்பிய மக்கள் தொகையில் பெரும்பாலானோர் ஸ்ர்ப்ஸ்காவிலேயே வாழ்கின்றனர்."

ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

### சுயாட்சி அரசியலமைப்பு:

ஸ்ர்ப்ஸ்கா குடியரசு அரசியலமைப்பு ரீதியாக சரஜேவோவை ஸ்ர்ப்ஸ்காவின் தலைநகராகக் குறிப்பிடுகிறது என்றாலும், வடமேற்கு நகரமான பஞ்ச லூகா பாராளுமன்றம் உட்பட பெரும்பாலான அரசாங்க நிறுவனங்களின் தலைமையகமாகும். எனவே இது நடைமுறை தலைநகராகும்.

பால்கன் போருக்குப் பிறகு, ஸ்ர்ப்ஸ்கா குடியரசு சில காலம் தனது இராணுவத்தைத் தக்க வைத்துக் கொண்டது. ஆனால் ஆகஸ்ட் 2005இல் ஸ்ர்ப்ஸ்காவின் இராணுவத்தின் கட்டுப்பாட்டை மாநில அளவிலான காவல் அமைச்சகத்திற்கு மாற்றப்பட்டது.

அத்துடன் ஸ்ர்ப்ஸ்கா குடியரசின் பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் இராணுவத்தை ஜனவரி 1, 2006 க்குள் அகற்றவும் ஒப்புதல் அளித்தது. மேற்குலகின் ஆதிக்க மனப்பான்மையில் நேட்டோ, போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினாவின் அமைதிக்கான கூட்டாண்மை திட்டத்திற்கு முன்நிபந்தனையாக உள்ளது.

### 1995 ஸ்ரெப்ரினிகா இன படுகொலை:

1995 ஆம் ஆண்டு ஸ்ரெப்ரினிகாவில் நடந்த இனப்படுகொலையின் நினைவாக ஜூலை 11 ஆம் தேதியை சர்வதேச தினமாக ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு செர்பிய தலைவர்கள் கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

செர்பிய ஜனாதிபதி அலெக்சாண்டர் வுசிக் (Aleksandar Vucic) இதனை எதிர்த்து கடைசி தருணம் வரை போராடுவேன் என்றும் கூறியுள்ளார்.

ஜெர்மனி மற்றும் ருவாண்டாவால் தொடங்கப்பட்ட இந்த தீர்மானம் அமெரிக்கா, பிரான்ஸ், நெதர்லாந்து, வடக்கு மாசிடோனியா, சிலி, அயர்லாந்து மற்றும் பல நாடுகளால் இணைந்து அனுசரணை வழங்கப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டில், ஹேக்கில் உள்ள முன்னாள் யூகோஸ்லாவியாவுக்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICTY) ஜூலை 1995 இல் ஸ்ரெப்ரெனிகாவில் செர் பியப் படைகளால் செய்யப்பட்ட குற்றங்கள் இனப்படுகொலை என்று தீர்ப்பளித்தது.

சர்வதேச நீதிமன்றம் (ICJ) இந்தத் தீர்ப்பை 2007 இல் உறுதி செய்தது.

### போஸ்னிய முஸ்லிம் படுகொலை

பால்கன் போரில் 7,000 முதல் 8,000 போஸ்னிய முஸ்லிம் கைதிகள் கொல்லப்பட்டது இனப்படுகொலை என்பதை நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி தீர்ப்பாயம் நிறுவியது.

2015இல், ஐக்கிய இராச்சியம் ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் ஸ்ரெப்ரெனிகா இனப்படுகொலையின் நினைவாக ஒரு தீர்மானத்தை அறிமுகப்படுத்தியது. ஆனால் அதனை ரஷ்யாவால் வீட்டோ செய்யப்பட்டு, அதை ஐநா ஏற்றுக்கொள்வதைத் தடுத்தது.

### ஐ.நா தீர்மானம் என்ன சொல்கிறது?

ஸ்ரெப்ரெனிகா இனப்படுகொலையின் போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைக்கு தண்டனை பெற்றவர்களின் செயல்களை கடுமையாக கண்டிக்கிறது என அத்தீர்மானம் தெரிவிக்கிறது.

ஸ்ரெப்ரெனிகா இனப்படுகொலையில் உயிர் பிழைத்தவரும், ஸ்ரெப்ரெனிகா நினைவு மையத்தின் கண்காணிப்பாளருமான அசிர் ஒஸ்மானோவிக், கடந்த மாதம் ஒரு உரையில் இந்த தீர்மானத்தின் முக்கியத்துவத்தை விளக்கினார்.

போரின் போது ஸ்ரெப்ரெனிகாவில் சிறுவயதில் தனது கொடுமையான அனுபவத்தை விவரித்த அவர், "எங்கள் போராட்டம், துரதிர்ஷ்டவசமாக, இன்னும் வெகு தொலைவில் உள்ளது. நாம் இரக்கமற்ற இனப்படுகொலை மறுப்பு, வரலாற்று திருத்தம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட வன்முறை அச்சுறுத்தலுக்கு உள்ளாகிறோம்.

ஸ்ரெப்ரெனிகா இனப்படுகொலை ஒரு உலகளாவிய சோகமாக சர்வதேச அங்கீகாரம், இந்த கொடூரத்தை தடுக்க உதவும் மற்றும் உலகளாவிய விழிப்புணர்வு மூலம், உலகில் வேறு எந்த சமூகமும், இக்கோரங்களை பகிர்ந்து கொள்ள வராது என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என கோரினார்.

### செர்பிய மறுப்பு நிலை :

ஸ்ர்ப்ஸ்கா குடியரசு இன் தலைவரும், Srebrenica இனப்படுகொலையின் வழக்கமான மறுப்பாளருமான Milorad Dodik, செர்பிய மக்களை அடிமை மயமாக்கும் இலக்கைக் கொண்ட போஸ்னிய அரசியல்வாதிகள் மற்றும் மேற்குலகில் இருந்து அவர்களின் ஆதரவாளர்களின் ஆத்திரமூட்டல்களை உள்ளடக்கியதாக தீர்மானம் உள்ளது என்றார்.

இனப்படுகொலை நடக்கவில்லை என்று செர்பியர்கள் கூறுகிறார்கள். நாங்கள் எந்த தீர்மானங்களையும் ஏற்கவில்லை. அது பற்றிய எந்த ஊகமும் முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

### சர்வதேச இனப்படுகொலை வழக்குகள்:

கடந்த காலத்தில் பல சர்வதேச இனப்படுகொலை வழக்குகள் நடந்துள்ளன. குறிப்பாக 2019இல், ரோஹிங்கியாவுக்கு எதிரான இனப்படுகொலைக்காக காம்பியா மியான்மர் மீது வழக்கு தொடர்ந்தது. 2023 இறுதியில் தென்னாப்பிரிக்கா அரசு பாலஸ்தீன காசா தொடர்பான இனப்படுகொலைக்காக இஸ்ரேலுக்கு எதிராக ஒரு சட்ட வழக்கைத் தொடங்கியதும் அறிந்ததே.



# இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்து களம் கொடுத்த கலாசூரி சிவகுருநாதன் !

## பேர்த் நூல் வெளியீட்டில் பேராசிரியர் அமீர் அலி உரை:

இலங்கையில் இளம் படைப்பாளிகளின் படைப்புகளைத் தினகரனில் தொடர்ந்து வெளியிட்டு, தமிழ் இலக்கியத்திற்கு பெருந்தூணாக விளங்கியவர் கலாசூரி சிவகுருநாதன். அத்தோடு இலங்கை இளம் எழுத்தாளர்களை ஜாதி மத இன பேதமின்றி ஊக்குவித்து வந்தவர். இந்த நாட்டின் முக்கிய தேசிய பத்திரிகையின் ஆசிரியராக இருந்தும் எந்த விதமான பந்தாவுமின்றி மிக எளிமையாக உறவாடியவர் என பேர்த் நகரில் ஜூன் முதலாம் நாள் நடைபெற்ற ‘இலங்கை இதழியலில் சிவகுருநாதன்’ நூல் வெளியீட்டில் பேராசிரியர் அமீர் அலி உரையாற்றினார்.

எந்தவொரு விடயத்தையும் சீரியஸாக எடுத்துக் கொள்ளாமல் மிகுந்த நகைச்சுவையுடன் கையாளுவார். அவரால் எழுத்து உலகில் உருவானவர்கள் நன்றி மறந்து அவருக்கு எதிராகச் செயற்பட்ட பொழுதும், அதைக் கணக்கெடுக்கமால் ஒரு மெல்லிய புன்னகையுடன் கடந்து போய் விடுவார்.

பதவியில் இருந்த காலத்தில் நடந்த எந்தவொரு ஆட்சி மாற்றமும் அவரைப் பாதிக்கவில்லை. அவர் பணியாற்றிய தினகரன் அரசு சார்ப்பான பத்திரிகையாக மாறிய பொழுதும், இலங்கை தமிழ் கலை இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கு அளப்பரியது. அவர் தினகரன் பத்திரிகை ஆசிரியர் பதவியிருந்து ஓய்வு பெறும் வரை எந்த விதமான மாற்றமும் ஏற்படவில்லை என்றும் பேராசிரியர் அமீர் அலி உரையாற்றினார்.

இலங்கையில் ஆகக் கூடுதலான காலம் பத்திரிகை ஒன்றின் பிரதம ஆசிரியர் பதவியை வகித்து சாதனை புரிந்த இவர், இன நல்லிணக்கத்திற்கு முன்மாதிரியாகச் செயற்பட்டார்.

மேற்கு அவுஸ்திரேலியா, பேர்த் (Perth) மாநகரில் கலாசூரி இ.சிவகுருநாதனின் ஊடக பணியை கௌரவிக்கும் முகமாக ‘இலங்கை இதழியலில் சிவகுருநாதன்’ எனும் நூல் ஜூன் முதலாம் திகதி டாக்டர் அமீர் அலி தலைமையில் வெளியிடப்பட்டது.

தினகரன் பத்திரிகையில் நீண்ட காலம் பிரதம ஆசிரியராக பணியாற்றிய, கலாசூரி இ.சிவகுருநாதன் மிக இலகுவான மொழியில் எல்லோருக்கும் புரியக்கூடிய வகையில் கருத்துக்களை சொல்வதில் அவருக்கு நிகர் அவரே. அவரின் நினைவாக இந்நூல் வெளியீடு, ஹில்வியூ இன்டர்கல்ச்சுரல் கம்யூனிட்டி சென்டர் மண்டபத்தில் இலக்கிய ஆர்வலர்கள், பத்திரிகை நண்பர்களும் கலந்து கொண்டனர்.

இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதன் அவர்களின் இருபதாம் ஆண்டு நினைவாக “இலங்கை இதழியலில் சிவகுருநாதன்” எனும் நூல் பேர்த் மாநாகரில் வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப்பணி இன்று வரை எவராலும் மறக்க முடியாத ஆளுமை உள்ளவராக தொடர்கின்றது என்பது அவரின் வாழ்வியல் சாதனையாகும். அவரின் இருபதாம் ஆண்டு நினைவு தினம் கடந்த வருடம் (08/08/2023) இலங்கையில் சிறப்புற நினைவு கூறப்பட்டது.

தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்ற முன்னாள் தினகரன் ஆசிரியர் கலாசூரி





இ.சிவகுருநாதன் இலங்கை இலக்கியப் பரப்பிலும், ஊடகத்துறையிலும் தனக்கெனப் பல முத்திரைகளைப் பதித்துக் கொண்டவர். அவரை நினைவு கூறும் ‘இலங்கை இதழியலில் சிவகுருநாதன்’ நூலினை ஐங்கரன் விக்கினேஸ்வரா தொகுத்துள்ளார். மூத்த தமிழ் எழுத்தாளர், இலக்கிய ஆர்வலருமான டாக்டர் அமீர் அலி தலைமையில் இந்நூல் வெளியீடு நடைபெற்றது.

இளம் தலைமுறையினரும் எழுத்தாளுமைகளை அறியும் வண்ணம், இந்நிகழ்வின் ஆரம்ப வரவேற்புரையை இளம் மாணவன் கௌசிக்ராஜ் கதிர்காமன்குமார் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான திரு நிலக்ஷன் ஸ்வர்ணராஜா நூலை அறிமுகம் செய்து சிறப்புரை ஆற்றினார். அதன்பின் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான திருமதி ஜனனி சிவமைந்தன் இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதன் நூல் பற்றிய சிறப்புரை நிகழ்த்தினார்.

தினகரனில் சிவகுருநாதன் ஆற்றிய பணி பற்றி எடுத்தியம்பும் இந்நூலின் சிறப்புரையை எழுத்தாளரும், நூலக ஆவண காப்பாளருமான திரு.கோபிநாத் தில்லைநாதன் ஆற்றினீர். தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப்பணி இன்று வரை அவரை எவராலும் மறக்க முடியாத ஆளுமை உள்ளவராக நிலை நிறுத்தியது அவரின் வாழ்வியல் சாதனையாகும். அவரின் இருபதாம் ஆண்டு நினைவாக “இலங்கை இதழியலில் சிவகுருநாதன்” எனும் நூலின் தொகுப்பாசிரியர் திரு.ஐங்கரன் விக்கினேஸ்வரா நூலின் ஏற்புரையை வழங்கினார். அத்துடன் கன்பராவில் இருந்து இலக்கிய ஆர்வலர் திரு.மயூரன் சின்னத்துரை, இலங்கையில் இருந்து மூத்த கல்வியியல் பணிப்பாளர் திரு. தணிகாசகம்பிள்ளை அவர்களும் காணொலி மூலம் உரையாற்றினர்.

இதன் பின் பேர்த் மாநகரில் இந்த நிகழ்வுகளை ஒழுங்கமைத்து, தொகுத்து வழங்கிய புகழ் பெற்ற பாடகரும், இலக்கிய ஆர்வலருமான திரு. ராஜன் வடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் இறுதியாக விழா சிறப்புற நிறைவு பெற்றது.

# மீறப்படும் அரசியலமைப்பு: ஐரோப்பிய ஒன்றியத்தினரிடம்
## சம்பந்தன் விடுத்த கோரிக்கை

அரசியலமைப்பாக இருக்கட்டும் வெவ்வேறு அரசாங்கங்களுடன் செயற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களாக இருக்கட்டும் அனைத்தும் மீறப்பட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வந்த தூதுக்குழுவினரிடம் சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளதாக சுமந்திரன் கூறியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வந்த தூதுக்குழுவினர் சம்பந்தன் மற்றும் சுமந்திரனை புதன்கிழமை (05.06.2024) சம்பந்தனின் இல்லத்தில் சந்தித்துள்ளளனர்.

குறித்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சுமந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், விசேடமாக தூதுக்குழுவினரின் நோக்கம் இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தல் பற்றி ஆராய்வதாகவுள்ளது. தமிழ் மக்களின் நிலைமைகள் தொடர்பாகவும் அவர்கள் மிகவும் விரிவான பேச்சுவார்த்தையை நடத்தினர்.

தேர்தல் தொடர்பாக எங்களுடைய நிலைப்பாட்டை தெளிவாக சொல்லி இருக்கின்றோம். மக்கள் ஆணையில்லாத ஜனாதிபதி, நாடாளுமன்றம் தொடர்ந்து இருக்க முடியாது.

தேர்தல் தொடர்பாக எங்கள் மக்கள் 70 வருடங்களாக கொடுக்கின்ற ஆணை தொராடர்ச்சியாக மீறப்படுகின்றது எனவும், தேர்தல்களை மேற்பார்வை செய்வதது மட்டுமல்ல, தேர்தலிலே மக்களுக்கு கொடுக்கப்படுகின்ற ஆணை நிறைவேற்றப்படுவதற்கும் ஐரோப்பிய ஒன்றியம் சர்வதேச மட்டத்தில் அழுத்தங்களை கொடுக்

### வடக்கின் போர்க்குற்றங்கள் தொடர்பிலான
# நேரடி சாட்சிகளை
## கோருகிறது பிரித்தானிய பொலிஸ்

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இரு கொலைகள் மற்றும் தமிழ் ஊடகவியலாளர் ஒருவரின் படுகொலை தொடர்பான விசாரணைக்கு உதவக்கூடிய தகவல்களை அறிந்தவர்களிடம் பிரித்தானியாவின் பயங்கரவாத எதிர்ப்பு பொலிஸார் உதவி கோரியுள்ளனர்.

2000களின் முற்பகுதியில் இலங்கை உள்நாட்டுப் போருடன் தொடர்புடைய போர்க் குற்றங்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் பயங்கரவாத எதிர்ப்பு பொலிஸார், தங்கள் விசாரணைக்கு உதவக்கூடிய தகவல்களை அறிந்தவர்கள் தம்மை தொடர்பு கொள்ளுமாறு கோரியுள்ளனர்.

2001ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பேரணியின் போது நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் இரண்டு பொது மக்கள் கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் ஊடகவிலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே இந்த தகவல் உதவி கோரப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் எம். கே. சிவாஜிலிங்கம் மற்றும் மாவை சேனாதிராஜா ஆகிய இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் காயமடைந்தனர்.

இந்த சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்

தொடர்ச்சி 10ம் பக்கம்

இலக்கியத்துறையில் தன் பயணத்தை மேற் கொண்டு வரும் இளம் ஊடகவியலாளர் நிவேதா ஜெகநாதன் அவர்கள் பதுளை மாவட்டத்தில் அப்புத்தளையில் உள்ள "பிறத் மலை" எனும் இடத்தில் பிறந்தார். அவர் சாதாரண வரையிலும் தொட்டலாககலை தமிழ் கனிஷ்ட வித்யாலயத்தில் கற்று அதன் பின்னர் கால சூழ்நிலை காரணமாக குடம்பத்தோடு இடம் பெயர்ந்து கொழும்புக்குச் சென்று கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் உயர்தரத்தை கற்றுள்ளார். அதன் பின்னதாக மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பட்ட படிப்பை கற்று பின்னர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முதுமாணி பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளார். அவரை சந்தித்து நேர்காணல் ஒன்றை மேற்கொண்டிருந்தேன்.

**உங்களுக்கு ஊடகத்துறையில் எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?**


எனக்கு பாடசாலை தான் கலைத்துறைக்கு வித்திட்டது. பாடசாலைக் காலங்களில் விரும்பியும், விரும்பாமலும் ஆசிரியர்களின் கட்டாயத்தில் கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, பாவோதல் போட்டி என்ற எல்லா போட்டிகளிலும் பங்கு பற்றி அதிலே முதலிடங்களை பெற்ற போதுதான் எனக்கு என் மீது நம்பிக்கை மற்றும் ஆர்வம் ஏற்பட்டது. விலைமதிக்க முடியாத காலங்களும், அனுபவங்களும், வெற்றிகளும், தோல்விகளும் பாடசாலைக் காலத்தில் தான் ஆரம்பமாகின்றன. இப்போது இப்படி ஒரு இடத்தில் இருப்பதும் பாடசாலையில் இடப்பட்ட அடித்தளம் தான். அதற்கு முதலில் என்னை வளர்த்துவிட்டு ஊக்கப்படுத்திய அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது பெற்றோருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

நான் செய்திகளை பார்க்கும்போது ஏற்பட்ட அவாவினால் தான் ஊடகத்துறையில் ஆர்வம் ஏற்பட்டது. வானொலியில் செய்திகளை கேட்கும் போதும் சரி, தொலைக்காட்சியில் செய்திகளை பார்க்கும் போதும் சரி என்னை அறியாமல் எனது வாய் செய்திகளை வாசிக்கும். பத்திரிகைகளில் உள்ள செய்திகளை எல்லாம் நான் ஒவ்வொன்றாய் வாசித்து தொலைபேசியில் சேமித்து மீண்டும் மீண்டும் போட்டுக் கேட்பேன். அப்போது தான் நான் விடும் சிறு சிறு பிழைகளை எல்லாம் மீண்டும் வாசிக்கும் போது திருத்திக் கொள்வேன்.

**உங்களுடைய ஊடகத்துறை பயணம் பற்றி கூறுங்கள்?**


உயர்தரம் முடித்த பிறகு ஊடகத்துறைக்கு சென்று விட வேண்டும் என்ற ஆசையில் தொடர்ந்து வேலை வாய்ப்புக்களுக்காக முயற்சித்துக் கொண்டிருந்தேன். என்னை தவிர வீட்டில் உள்ள யாருக்கும் இந்த வேலையில் ஈடுபாடு இல்லை, அதனாலேயே கிடைத்த பல வாய்ப்புகளை தவறவிட நேர்ந்தது. பல போராட்டத்தின் பயனாய் ஒருவாறு வீட்டில் உள்ளவர்களின் மனதை மாற்றி வேலைக்கு சம்மதம் வாங்கியவுடன் வேலையும் கிடைத்தது. UTV யில் செய்தி வாசிப்பாளினி ஆகும் வாய்ப்பு கிடைத்தது. ஊடகத்துறையில் முதல் அடியை அங்கு தான் எடுத்து வைக்க முடிந்தது.

தொலைக்காட்சி என்றாலே பலருக்கு பிடிக்கும். TVயில் தோன்றுவது பெருமை என சிலரும், TVயில் வேலை வாய்ப்பு கிடைப்பது வரம் என சிலரும் நினைத்துக் கொண்டிருந்த காலம் கடந்து இப்போது ஒவ்வொரு வரும் தங்களுக்கு என ஒரு Youtube பக்கத்தை உருவாக்கி விஞ்ஞான உலகில் கொடி கட்டி பறந்து கொண்டிருக்கின்றார்கள். எது எவ்வாறாக இருந்தாலும் செய்வனவற்றை சிறப்பாகவும், பிறருக்கு பயனுள்ளதாகவும் செய்வார்களாயின் சிறப்பு. தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை போன்ற துறைகளுக்கு என்று எப்பொழுதுமே ஒரு தனிச்சிறப்பு உள்ளது. ஊடகத்துறையில் அர்ப்பணிப்புடன் செயற்படுவோரால் மட்டுமே இந்த துறையில் தொடர்ச்சியாக பயணிக்க முடியும். இப்போது நான் முழுநேர ஊடகப் பணியில் இருந்து விலகி சுதந்திர ஊடகவியலாளராக இருக்கின்றேன். இருந்தாலும் இந்த பணியில் இருந்த நாட்டம் துளியேனும் குறையவில்லை.



நேர்கண்டவர் :
பிரியங்கா சதீஸ்குமார்
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்





# ஊடகத்துறையில் அர்ப்பணிப்புடன் செயற்படுவோரால் மட்டுமே தொடர்ச்சியாக பயணிக்க முடியும்.

## இளம் ஊடகவியலாளர் நிவேதா ஜெகநாதன்

**தாங்கள் நாவல்கள் மற்றும் சிறுகதைகள் எழுதுவீர்கள் என அறிந்தேன். அவற்றில் நீங்கள் பேசு பொருளாக எதை முன்வைக்கின்றீர்கள்?**

ஆமாம் நான் சில நூல்களை எழுதியுள்ளேன். ஐந்து நாவல்கள் மற்றும் ஒரு சிறுகதை தொகுப்பு எழுதியுள்ளேன். எனது நாவல்களின் மையக்கரு மலையகத்தினை அடிப்படையாகக் கொண்டது. மலையகத்தைப் பொருத்தவரை கதை எழுதுவதற்கு என்று பல காரணிகள் தாராளமாக கொட்டிக்கிடக்கின்றன. ஒரு பக்கம் இயற்கையின் அற்புதத்தை தன்னகத்தை கொண்ட பரப்பு, மறுபுறம் இலங்கையின் பொருளாதாரத்தின் வருவாய் என்றாலே முக்கிய பங்காக விளங்கும் தேயிலைத் தோட்டம் என்பனவாகும். இவை இரண்டுக்கும் பின்னால் மறைக்கப்பட்ட எங்கள் மக்களும், அவர்களின் சொல்லனாத்துயரங்களும், அவர்களுடைய வாழ்வியலில் ஏற்படும் சவால்களும் தான் என்னை எழுத வைத்தது. இவை மலையகத்தைக் கொண்டு எழுத தூண்டும் காரணிகளாக விளங்கின. எனது நாவல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையிலானவை. சொந்த வாழ்க்கை அனுபவங்கள் அதிகமாயினும் அதற்கு கற்பனை மேலோட்டங்களை கலந்தே கொண்டு செல்ல முடிந்தது. ஒரு படைப்பானது எமது சமூகம் பற்றி அதிகமாக பேசும் போது தான் அங்கே ஒவ்வொருவரின் கதையும் ஆங்காங்கே தொட்டுச் செல்ல முடிகின்றது. அது அவசியமானதும் கூட.

**தாங்கள் எழுதிய புத்தகங்களில் மிகவும் பிடித்த புத்தகம் எது? எதனால்?**

எழுதிய ஆறு நூல்களும் பிடித்த மானவை தான். அதிகமாக முதலாவது நூல் "பாலை நில ரோஜா" மூன்றாம் நூல் "முதலில் பூத்த முல்லை" என்பன சற்று அதிகமாக பிடித்த நாவல்கள் ஆகும். இந்த நூல்கள் அதிகம் பெண்ணியம் மற்றும் சமூக வளர்ச்சி தொடர்பில் பேசி உள்ளமை கூற வேண்டிய விடயம் ஆகும்.

பிடித்த இரண்டு நூல்களில் அதிகமாக பெண்கள் பேசு பொருளாக, ஒரு சமூகத்தில் முன்னேற்றகரமான வளர்ச்சியாளராக பெண்களின் வகிபங்கு தொடர்பில் எழுதி உள்ளதாலும், துணிச்சல் மிக்க பெண்கள் மூலம் வீட்டில் இருந்து சமூகம் வரை பல்வேறு மாற்றங்களை காண முடியும் என்பதனை இந் நூலில் எழுதி உள்ளதால் பிடிக்கும்.

**ஒவ்வொரு புத்தக வெளியீட்டுக்கும் நீங்கள் பெற்ற அனுபவம் எவ்வாறானது?**

ஒவ்வொரு நூல் வெளியீடும் நிறைய அனுபவங்களை கற்றுத் தந்தது. குறிப்பாக முதலாவது நூல் வெளியீட்டின் மூலம் நிறைய படிப்பினைகள் கிடைத்தன. ஒரு நூல் வெளியீட்டுக்கான ஆயுத்தங்களை எவ்வாறு செய்ய வேண்டும், ஒரு நூல் வெளியீட்டினை திறம்பட செய்வதற்கு எவ்வாறான முன்னேற்றங்கள் செய்ய வேண்டும், எவ்வாறான சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டும் போன்ற விடயங்கள் எல்லாம் முதல் வெளியீட்டின் மூலம் கிடைத்த அனுபவங்களாகவே நான் எடுத்துக் கொண்டேன். அதனால் அடுத்தடுத்த வெளியீடுகளை செய்யும்போது இந்த விடயங்களை திருத்திக் கொண்டு செய்ய முடிவதுடன் வெற்றிகரமான வெளியீடுகளை செய்த திருப்தியையும் என்னால் பெற முடிந்தது.

**இதுவரைக்கும் உங்களது படைப்புகளுக்கு கிடைத்த அங்கீகாரம் என்ன?**

நான் பெரும்பாலும் ஊடகத்துறை மற்றும் கலைத்துறைகளில் விருதுகளை எதிர்பார்ப்பதில்லை. விருதுகளைக் கொண்டு எப்போதும் படைப்பாளனை அறிய முனையக் கூடாது ஏனென்றால் இப்போது விருதுகள் மலிந்து போயுள்ளன. கலைஞனுக்கு தனது திறமையே முதல் அங்கீகாரம். இதுவரையான காலப்பகுதியில் ஊடக இலக்கிய பயணத்திற்காக சில தனியார் விருதுகள் எனக்கு கிடைத்துள்ளன.

**உங்களது எதிர்கால இலக்கு பற்றி கூறுங்கள்?**

எனக்கு இலக்கிய துறைக்குள் சிறந்து பயணிப்பதுவே இப்போதைய இலக்காக இருக்கின்றது. நாம் நேசிக்கின்ற துறையினை திறம்பட செய்வதை விட மகிழ்வு வேறேது.

# நிதியின்மையால் தேசியமட்ட வாய்ப்பு மறுப்பு

பிரதம செயலாளருக்கு சிறீதரன் எம்.பி கடிதம்..!!!

கிளிநொச்சி மாவட்டத்தின் மலையாளபுரம் புதியபாரதி விளையாட்டுக்கழகத்தின் இரு வீரர்கள் தேசியமட்ட கடற்கரை கரப்பந்துப் போட்டியில் பங்கேற்பதற்குத் தகுதி பெற்றிருந்த போதும், நிதியின்மை காரணமாக அவர்களின் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, பிரதேச செயலகங்களில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையே நடைபெற்ற, இருவர் பங்குபெறும் கரப்பந்துப் போட்டியில், கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் இயங்கும் மலையாளபுரம் புதிய பாரதி விளையாட்டுக் கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட திரு.ஜெயப்பெருமாள் மோகனரூபன், திரு.நாகராசா நிசாந்தன் ஆகிய இரு வீரர்களும் பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண நிலைகளில் வெற்றியீட்டி 2024.05.31 -2024.06.02 வரையான மூன்று நாட்கள் நீர்கொழும்பில் நடைபெற்ற தேசியமட்ட போட்டிகளுக்கு தகுதிபெற்றிருந்த போதும், “நிதியின்மை” காரணமாக அவர்கள் அழைத்துச் செல்லப்படவில்லை என்ற விடயம், கிளிநொச்சி மாவட்ட மக்களிடையே மிகக்கூடிய விசனத்தை ஏற்படுத்தியுள்ள சமநேரத்தில் அந்த மக்களின் பிரதிநிதியாக என்னையும் பாதிக்கின்ற சம்பவமாகவே நான் இதனைக் கருதுகிறேன்.


தேசியமட்ட மற்றும் சர்வதேசப் போட்டிகளில் பங்குபெறுவதற்கான வாய்ப்புகளைப் பெற்றிருந்தும், நிதி நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்த, பலநிலைப்பட்ட மாணவர்கள் மற்றும் வீர, வீராங்கனைகளுக்கு நன்கொடையாளர்கள், நிதியங்கள் என்பவற்றின் அனுசரணையோடும் தனிப்படவும் என்னால் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டதன் பிற்பாடே இவ்விடயம் குறித்து அறிய முடிந்ததால் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. அதேவேளை இவ்விடயம் அறிந்த கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ.மனோ கணேசன் அவர்களும் என்னைத் தொடர்பு கொண்டு வினவியதோடு தனது கவலையைப் பதிவுசெய்திருந்ததையும் தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

இந்நிலையில், தேசிய மட்ட போட்டிகளில் பங்கேற்பதற்காக குறித்த வீரர்களை அழைத்துச் செல்லும் பொறுப்பு மாகாண நிருவாகத்திற்கு உட்பட்டது என தெரிவிக்கப்படும் நிலையில், இடர்கள் மிகுந்தும் வளங்களும் வாய்ப்புகளும் குறைந்தும் இருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் மலையாளபுரக் கிராமத்திலிருந்து தமது திறமையால் தேசிய அங்கீகாரத்திற்குத் தகுதிபெற்ற வீரர்களது வாய்ப்பு, நிருவாக நடைமுறைகளின் சீரின்மையால் பறிக்கப்பட்டிருப்பது மனவருத்தத்துக்கும் கண்டனத்துக்கும் உரிய விடயம் என்பதுடன் அதுசார்ந்து குறித்த வீரர்கள் அதியுச்ச உளத்தாக்கங்களை எதிர்கொண்டிருப்பார்கள் என்பதை தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

இதுவிடயமாக தாங்கள் உயரிய கரிசனை கொண்டு, குறித்த வீரர்களின் வாய்ப்பு மறுக்கப்பட்டமைக்குரிய காரணத்தை வெளிப்படுத்துவதற்கும், அதற்கு மாகாண நிர்வாகமே பொறுப்பேற்க வேண்டும் எனில் உரிய அதிகாரிகள் மீது முறையான நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் இதுபோன்ற சம்பவங்கள் மீளநிகழாமையை உறுதிப்படுத்துவதற்கும் ஆவனசெய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

# குண்டுகளை விட மிகவும் ஆபத்தானது நம் மீதும், நம் சமூகத்தின் மீதும்

## தொடுக்கப்படும் உளவியல் யுத்தம்!



ஈழ மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் மதன்

எமது அரசியல் பரப்பில் எதிர்ப்பு அரசியல் அல்லது சரணாகதி அரசியலைச் செய்யும் தலைவர்கள் மலிந்துவிட்டுள்ள சூழலே பெரும்பாலும் காணப்படுகின்றது. இது ஆரோக்கியமான விடயமா..! என்றால் இல்லை என்பதே எமது நிலைப்பாடு ஆகும்.

தமிழ் பேசும் மக்களாகிய நாம் மாற்றுக் கருத்துடைய பல அரசியல் சக்திகளாக தனித்தனியாக இயங்கிய பொழுதிலும் பொது விடயங்களான உரிமை தொடர்பான, எமது மக்களுக்கு எதிரான அடக்குமுறை களுக்கு எதிராக ஒற்றுமைப்பட வேண்டிய கட்டாயமும் கட்சிசார் அரசியலில் அவரவர் தம் தனித்துவத்துவத்தைக் கடைப்பிடிப்பதனையும் உறுதி செய்தல் வேண்டும்.

பிரதேச, மத,சாதியவாதங்கள் கடந்த அரசியலும் அசைக்க முடியாத ஒற்றுமையும் இன்றியமையாத தமிழ் பேசும் மக்களுடைய அரசியலாக நாம் கருதுகின்றோம்! உதிரிகளாக, பிரித்தாளப்படும் மக்களாக பதவிக்கும், பணத்திற்கும் விலைபோவோ ராக நாம் இருப்போமேயானால் தோல்வி யானது தவிர்க்கமுடியாத ஒன்றாக அமைந்துவிடும்.

வடக்கும், கிழக்கும் அதன் வளங்களும், நிலபுலங்களும், பொருளாதார மீட்சியும், அரசியலும் தமிழ் பேசும் மக்களின் ஒன்றிணைந்த பலத்துடன் ஒருவரையொருவர் ஆதரித்துக் கொண்டு முன்னோக்கி நகர்வோம்..!

தொல்பொருளியல் என்ற போர்வையில் தமிழ் பேசும் மக்களின் பூர்வீக நிலங்கள், ஆலயங்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், விவசாய நிலங்கள், வீடுகள் எல்லாம் சூறையாடிவிட்டு பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களை மாத்திரம் உள்ளடக்கிய தொல் பொருள் செயல் அணியும், அதன் செயலணியின் தலைவராக பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்னவும் முன்னாள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டதையும் தமிழ் பேசும் உறுப்பினர்கள் இச் செயலணியில் இடம்பெறாமையும் பலத்த சந்தேகங்களை வெளிப்படுத்தி நின்றதோடு ஏன் நாம் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் என்ற உண்மையையும் புலப்படுத்துகின்றது..!

எமது தலைமீது கொட்டப்படும் குண்டுகளை விட மிகவும் ஆபத்தானது நம் மீதும் நம் சமூகத்தின் மீதும் நம் எதிர்கால சந்ததியின் இருப்பின் மீதும் தொடுக்கப்படும் உளவியல் யுத்தம்! இவையெல்லாம் உன்னைத் தோற்றுப்போனவனாக, வாய் மூடி மௌனியாக, உண்பதற்கு மாத்திரம் வாயைத் திறப்பவனாக உரிமைபற்றி வாய் திறக்கவே பயப்பிடுகிறவனாக,சமூகமாக உன்னை ஓர் மூலையில் இருத்தி அழகு பார்க்கும்..!

எனவே இவற்றை உடைத்தெறிந்து எரிந்த சாம்பலிலிருந்து பறந்த பீனிக்ஸ் பறவையாக எமது மக்களின் உரிமைகள் வெல்ல உழைப்போம். - என ஈழ மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் மதன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# மீண்டும் பிரதமராகும் மோடிக்கு ரெலோ தலைவர் வாழ்த்து.



இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற பிரதமர் மோடிக்கு, ரெலோவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் வாழ்த்துத் தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:- இந்திய நாட்டின் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தங்களுடைய கட்சி நாடு தழுவிய ரீதியில் பெற்ற வெற்றிக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

தங்களின் தலைமையில் பாரதீய ஜனதாக் கட்சி தொடர்ந்தும் மூன்றாவது தடவையும் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றியைப் பெற்று ஆட்சி அமைப்பது தங்கள் மீது மக்கள் கொண்டுள்ள அதீத நம்பிக்கையை பறைசாற்றுகிறது. தங்களது இந்த வெற்றிக்கு எமது ஈழ மக்கள் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமிதம் அடைகிறேன் என்றுள்ளது.


# தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறைப் போராளி

## விநாயகம் பிரான்ஸில் மறைவு!

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் புலனாய்வுத்துறை முன்னாள் போராளியான விநாயகம் பிரான்ஸில் சாவடைந்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரும் புலனாய்வுத்துறைப் போராளியுமான விநாயகம் இறுதிப் போரின் பின்னர் புலம் பெயர்ந்து பிரான்ஸில் வசித்து வந்த நிலையில் செவ்வாய்க்கிழமை காலை உயிரிழந்துள்ளார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த விநாயகத்தின் உடல்நிலை மோசமடைந்ததை அடுத்து பிரான்ஸில் உள்ள மருத்துவமனையொன்றில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிர் பிரிந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.















## தேர்தலைப் புறக்கணிப்...

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவதும் தேர்தலைப் புறக்கணிப்பதும் ஒன்று என்று கூறுவது தவறானது. அது மக்களைத் திசைதிருப்புவதற்காகச் சொல்லப்படும் பொய். இரண்டும் வெவ்வேறானவை என்பதை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும் என ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரித்துச் செயற்படுவதற்கு ரெலோவும், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியும் முழுமையான இணக்கத்தை வெளியிட்டுள்ளன. அதேவேளை பொதுவேட்பாளரை வர்த்தக சங்கங்கள் உள்ளிட்ட சிவில் சமூக அமைப்புகள் ஆதரித்துள்ளன.

இந்த நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியானது ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு கையாண்டால் தமிழ் மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனச் சிந்தித்து விரைவாக முடிவெடுக்க வேண்டும். ஆதலால், முடிவுகளைப் பிற்போட்டு காலம் தாழ்த்தி முடிவெடுப்பது தமிழர் நலன் சார்ந்ததாக இருக்காது.

பொதுவேட்பாளர் விவகாரம் தோற்றுப் போக வேண்டும் எனப் பலர் விரும்புகின்றார்கள். அதில் சி.வீ.கே.சிவஞானமும் ஒருவராக இருக்கலாம். இந்த விடயம் வெற்றிகரமாக நடந்தேறினால், சிங்களத் தரப்பு மாத்திரம் அல்ல சர்வதேச சமூகம்கூட தமிழ் மக்களுடைய அந்த ஆணை பற்றிச் சிந்திக்கவேண்டிய ஒரு சூழல் ஏற்படும். இதற்கிடையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொது வேட்பாளரும், தேர்தல் புறக்கணிப்பும் ஒன்றுதான் என்று மக்களிடம் சொல்லி வருகின்றது. அது உண்மையில்லை, இரண்டும் வெவ்வேறானவை.

இலங்கையில் இருப்பது வெறுமனே ஒரு பொருளாதாரப் பிரச்சினை. அதைத் தீர்த்துவிட்டால் அனைத்துப் பிரச்சினையும் தீர்ந்துவிடும் என்று அரசாங்கம் இலங்கையிலும் சர்வதேசத்துக்கும் சொல்லிக்கொண்டிருக்கின்றது. தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் பொருளாதாரப் பிரச்சினை தீர்க்கப்பட மாட்டாது என்பதை உலகறியச் செய்யவும் சிங்கள மக்களுக்குப் புரிய வைக்கவும் வேண்டும். அந்த ஆணைக்காக தமிழ் மக்கள் பெருமெடுப்பில் வாக்களிக்கும்போது அதை கவனிக்க வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்படும்.

எனவே தேர்தல் புறக்கணிப்பும், தமிழ்ப் பொதுவேட்பாளருக்கான ஆணையும் வேறு வேறானவை - என்றார்.

## தமிழ்ப் பொதுவேட்பாளர்...

தமிழ்ப் பொதுவேட்பாளர் என்பது நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்று. அது தெரிந்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் ஓடிக்கொண்டிருக்கின்றனர். இவர்களே பிரபாகரன் உருவாக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழித்தவர்கள். இவ்வாறு வன்னி மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது- ஒன்றிணைந்து ஒரு தலைமையைத் தேர்ந்தெடுக்க முடியாதவர்கள் ஓரணியாகச் செயற்பட முடியாதவர்கள் மக்களை ஒன்றுபடுத்தப் போகின்றனர் என்று கூறுவது வேடிக்கையானது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் என்பது கல்லில் நார் உரிக்கும் செயற்பாடு போன்றது. இது எனது தனிப்பட்ட கருத்து.

தமிழ்த் தேசியக் கட்சிகளும், அவற்றின் தலைவர்களும் ஒன்றுபடப் போவதில்லை. அவர்கள் ஒன்று பட்டு நின்று தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தினால் அதற்கு ஆதரவாகப் பரப்புரைகளை மேற்கொள்ள நான் மட்டுமல்ல. தமிழ் மக்களும் ஒன்றுபடுவார்கள். வெற்றியும் பெறலாம்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு நிலைப்பாடு, இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் இரு வேறு நிலைப்பாடுகள், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஒரு நிலைப்பாடு என்று நிலைமை இருக்கின்றது. தங்கள் பதவிப் போட்டிகளைத் தீர்க்கமுடியாத கட்சிகள் மக்கள் பிரச்சினையைத் தீர்ப்போம் என்று கூறுவது ஏமாற்று வேலையாகும்.

மொத்தத்தில் சஜித், ரணில், அநுர. பகிஷ்கரிப்பு. தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற ஐந்து முடிவுகளைத்தான் தமிழ் மக்கள் பகிர்ந்து கொள்ளப் போகின்றனர். மக்களின் இந்த நிலைமைக்குத் தமிழ்க் கட்சிகளைத் தவிர வேறு யாரும் காரணமாக இருக்க முடியாது.

பொதுவேட்பாளர் என்ற விடயம் பல படிகளைத் தாண்ட வேண்டியிருக்கும். யார் வேட்பாளர், எந்தக் கட்சியில் போட்டியிடுவது, வடக்கைச் சேர்ந்தவரா? கிழக்கைச் சேர்ந்தவரா?, ஆணா? பெண்ணா? என்ற பல விடயங்கள் இருக்கின்றன. அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஓரணிக்கு வராவிட்டால் தமிழ் மக்கள் வெவ்வேறு தீர்மானங்களை எடுப்பார்கள். மக்கள் மனங்களை, மக்களின் நாடித்துடிப்பைக் கண்டறிந்து முடிவுகள் எடுக்கப்படவேண்டும்.

அம்பாறை பறிபோய்விட்டது. அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் திருகோணமலையில் தமிழர் பிரதி நிதித்துவம் பறிபோய்விடும். கட்சி கள்பிரிந்து நின்றால் வன்னியிலும் இதே நிலைமைதான். நிலைமை இப்படியிருக்க ஜனாதிபதித் தேர்தலில் எவர் வென்றாலும் எதுவும் நடக்கப்போவதில்லை. முட்டாள்தன மான முடிவுகளை எடுக்காது புத்திசாலித்தனமாக நடந்துகொள்ள வேண்டும் - என்றார்

## எங்களுக்குச் சரிவராது!...

தமிழ்ப் பொதுவேட்பாளர் எங்களுக்குச் சரிவராது - இவ்வாறு தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

நான் பொதுவேட்பாளருக்கு மாறானவன். பொதுவேட்பாளர் தேவையற்றது என எங்களுடைய அரசியல்வாதிகளுக்குள்ளேயே முதன் முதலில் கருத்துச்சொன்னவன். பொதுவேட்பாளர் சாத்தியமில்லை என்றும் அதற்கான காரணங்களையும் நான் கூறியிருக்கிறேன்.

பொது வேட்பாளர் யார் என்ற தெரிவிலேயே அந்தவிடயம் முடங்கும். கடந்தகால தேர்தல்களில் நாங்கள் நிரூபித்து வந்த மக்கள் ஆணை மலினப்படுத்தப்படும் என்ற கருத்தையும் கூறிக்கொள்கிறேன். ஆனால், ரணில் விக்கிரம சிங்கவை ஜனாதிபதியாக்குவதற்குத்தான் இவர்கள் பொது வேட்பாளரை முன்வைத்தார்கள் என்ற கருத்தில் நான் உடன்படவில்லை.

இந்த பொதுவேட்பாளர் விடயத்தை முதலில் பேசியது சுரேஷ் பிரேமச்சந்திரன் தான். அது அவரது நியாயமான கருத்து. அதனை நான் பிழை என்று சொல்லவில்லை. அதில் நான் உடன்படவே இல்லையே ஒழிய ரணிலை ஜனாதிபதியாக்கும் கருத்து நிலைப்பாட்டோடு சுரேஷ் பிரேமச்சந்திரன் இதனை முன்னெடுத்திருப்பார் என்ற எண்ணம் எனக்கில்லை. தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் கட்சி ரீதியாக இது வரையில் எந்த முடிவையும் அறிவிக்கவில்லை. ஆனாலும் கட்சி உறுப்பினர்கள் தனித்தனியே இதுபற்றி பேசி வருகிறார்கள். இந்தவிடயம் தொடர்பில் சில வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கட்சியின் மத்திய செயற்குழுவில் நாங்கள் பேசியிருந்தோம்.

இந்தவிடயத்தில் கட்சிக்குள்ளும் இரண்டு கருத்துக்கள் இருந்தன. அப்படி தொடர்ந்தும் இருக்கும். இல்லாமலும் போகலாம். கட்சி முடிவெடுக்காமல் இருக்கிறபோது கட்சி என்றுசொல்லி சிலபேர் தனித் தனியாகவும் பேசியிருக்கலாம். இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சியை பணிய வைக்கலாம் என்று ஒருவர் சொல்லியிருக்கிறார். இவரைப் போல எத்தனையோ பேரை நாங்கள் கண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல யாழ்ப்பாண மக்களை உசுப்பேற்றி பணிய வைப்பதாகவும் கூறியிருக்கி றார். அப்படி உசுப்பேற்றி யாழ்ப்பாணமக்களை பணிய வைக்க முடியுமா? உசுப் பேத்தி எங்கள் மக்களை எதுவும் செய்யலாம் என்று யாரும் சொல்வது தவறு. எதனையும் மக்கள் தீர்மானிப்பார்கள். சரியென்றால் ஏற்றுக்கொள்வார்கள். இல்லையென்றால் விலக்கிவைப் பார்கள். இதனைப் புரிந்து கொண்டு செயற்படவேண்டும் - என்றார்.

## ஒரு விஷப் பரீட்சையாகும்..

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் விஷப்பரீட்சை தேவையற்ற ஒன்று என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந் திரன் கூறியுள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங் கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதில் மேலும் அவர் கூறியுள்ளதாவது, நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தேர்தலில் வெல்வதற்காக அல்ல. தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்துவதற்காக. ஆனால் அது நல்ல யோசனை அல்லை. அது தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்தக் கூட உதவாது. நீண்டகாலமாக நாங்கள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்தி வருகின்றோம். ஆகவே இது தேவையற்ற விஷப்பரீட்சையாகும்.

ஏங்களுடைய கட்சிக்குள் இந்த விடயம் தொடர்பாக மீண்டும் பேசியிருக்கின்றோம். கட்சியில் உள்ள பலருடைய நிலைப்பாடு தேவையற்றது என்பது தான். ஆனால் அது குறித்து இப்போது எந்தவொரு தீர்மானத்தையும் எடுப்பதில்லை என முடிவெடுத்துள்ளோம் எனவும் கூறியுள்ளார்.

## தமிழீழத் தேசிய உலகிற்கு..

கட்டுப்படுத்த முடியாது. கடந்த 14 வருடங்களாக நாடாளுமன்றத் தேர்தல் என்றாலும் சரி, மாகாணசபைத் தேர்தல் என்றாலும் சரி நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது அவையைக் கூட்டி அந்த தேர்தல்களை எவ்வாறு எங்களுடைய விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு கருவியாகப் பாவிக்கலாம் என்ற அடிப்படையில்தான் நாங்கள் முடிவுகள் எடுத்துள்ளோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடும் இவ்வாறாகத்தான் இருந்திருக்கிறது. இந்நிலையில், இன்று மூன்று தெரிவுகள் இலங்கை தேர்தல் தொடர்பாக தமிழ் மக்களிடையே வைக்கப்பட்டுள்ளன.

முதலாவது சிங்களவர்களுடன் பேரம் பேசி எமக்கு அதிக உரிமைகளை தருபவர்களை நாம் ஆதரிக்க வேண்டும். மற்றையது அதிபர் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும். மூன்றாவது தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும். முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நடைபெற்று இன்று 15 ஆண்டுகள் ஆகிவிட்டன.

இன்றுவரை ஒரு சிங்கள புத்திஜீவியோ, ஒரு சிங்கள அரசியல் தலைவரோ, ஒரு சிங்கள மாணவத் தலைவரோ தாங்கள் செய்த பிழையை ஏற்றுக் கொள்ளவும் இல்லை, மன்னிப்பும் கேட்கவும் இல்லை சிங்களவர்களுடன் பேசிய பேரத்தை இந்தியாவினால் கூட நடைமுறைப்படுத்த முடியவில்லை.

எனினும், தமிழ் பொதுவேட்பாளர் மூலமாக நாங்கள் ஒரு அரசியல் திரட்சியைக் கொண்வரலாம், சுயநிர்ணயத்திற்கான திரட்சியையும் கொண்டு வரலாம்" என்றும் உருத்திரகுமாரன் குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கின் போர்க்குற்ற...

தல் பேரணியின் போது நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 21 நவம்பர், 2023 அன்று தெற்கு லண்டனில் கைது செய்யப்பட்ட 60 வயது நபர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், 2022 பெப்ரவரியில் கைது செய்யப்பட்ட 48 வயது நபரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.


இந்த வழக்கு விசாரணைகளுக்கு நேரடி சாட்சியங்கள் அவசியம் எனத் தெரிவித்துள்ள கமாண்டர் டொமினிக் மர்பி அவ்வாறு தகவல்களை வழஙகுபவர்களின் தனிப்பட்ட விபரங்கள் பாதுகாக்கப்படும் உறுதியளித்துள்ளார்.


"வழக்கைத் தொடர்ந்து கட்டமைக்க முடிந்த வரை நேரில் பார்த்த சாட்சியங்கள் தேவை. இலங்கையில் உள்நாட்டுப் போரின் போது நடந்த இச்சம்பவங்கள் குறித்து இதுவரை வெளிப்படுத்தப்படாத தகவல்களை அறிந்தவர்கள் இருக்கின்றமையை நாம் அறிவோம். அவர்கள் பொலிஸாரை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். நாங்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். உங்கள் தகவல் மிகவும் நம்பிக்கையுடன் கையாளப்படும்."

குறிப்பாக 2000-களின் முற்பகுதியில் இலங்கையில் வாழ்ந்தவர்கள் அல்லது அந்த நேரத்தில் இலங்கையில் வசித்த உறவினர்கள் அல்லது நண்பர்களாக இருந்தவர்கள் அல்லது அன்றிலிருந்து வெளிநாட்டில் இருந்த, விசாரணைக்கு உதவக்கூடிய தகவல்களை அறிந்தவர்களை தொடர்பு கொள்ள அதிகாரிகள் தயாராக இருப்பதாக டொமினிக் மர்பி குறிப்பிட்டுள்ளார்.

தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!

SCAN ME









# தாண்ட வேண்டிய சோதனை

முக்கால் நூற்றாண்டு வரலாற்றைக் கொண்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சோதனைமிக்க காலகட்டத்தை தற்போது, எதிர்கொண்டிருக்கிறது. 1949ஆம் ஆண்டு, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசில் இருந்து முரண்பட்டுக் கொண்டு, எஸ்ஜேவி செல்வநாயகம், நாகநாதன், வன்னியசிங்கம் போன்ற தலைவர்களால் உருவாக்கப்பட்டது தான் இலங்கை தமிழ் அரசுக் கட்சி.

ஒற்றையாட்சி முறையை நிராகரித்து, சமஷ்டி ஆட்சி முறையே தமிழர்களுக்கு நியாயமான உரிமைகளை- தீர்வை வழங்கும் என்ற கோரிக்கையுடன் இந்தக் கட்சி தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மற்றும், அப்போது செல்வாக்குப் பெற்றிருந்த இடதுசாரிகளிடம் இருந்து, இந்தக் கட்சி, சவால்களை எதிர்கொண்டாலும், காலப்போக்கில் தமிழ் மக்களின் நம்பிக்கையையும், ஏகோபித்த ஆதரவையும் பெற்றுக் கொண்டது.

அதனால் தான், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நிறுவுநரான செல்வநாயகம், தமிழ் மக்களால் தந்தை செல்வா என்று கொண்டாடக் கூடிய நிலைக்கு உயர்ந்தார். ஒரு கட்டத்தில், தனித்து நின்று போராடி, தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியாது, சிங்கள பௌத்த பேரினவாதத்தை எதிர்கொள்வதற்கு இன்னும் பலமான கட்டமைப்புத் தேவை என்று அவர் உணர்ந்து கொண்டார். அதனால், எதிர்த்து அரசியல் செய்த ஜி.ஜி.பொன்னம்பலத்தின் வீடு தேடிச் சென்று, 1972இல், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியை உருவாக்கினார்.

அதற்குப் பின்னர், தனியான செயற்பாடுகள் இல்லாமையால், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி முக்கியத்துவம் இழந்து போனது.

1977இல் இந்தக் கூட்டணியில் இருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விலகிச் சென்ற பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணியாக அது மாற்றமடைந்தது. 2004ஆம் ஆண்டு, பொதுத்தேர்தல் காலகட்டத்தில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளராக இருந்த ஆனந்தசங்கரி, விடுதலைப் புலிகளுடன் முரண்பட்டுக் கொண்ட நிலையில், தமிழ் அரசுக் கட்சி மீளப் புதுப்பிக்கப்பட்டது.

அதுவரை உறக்கத்தில் இருந்த தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான கட்சியாக மாறியது. அதற்குப் பின்னர், தமிழ் தேசிய அரசியலை வழிநடத்தும் பிரதான கட்சியாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியே இருந்து வந்திருக்கிறது. உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்கு எடுத்த முடிவினால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், உடைத்து, தன்னையும் சிதைத்து விட்டு நிற்கிறது அந்தக் கட்சி.

புதிய தலைவர் தெரிவு விவகாரத்தில் தமிழ் அரசுக் கட்சிக்குள் தோன்றிய போட்டி, நிர்வாகத் தெரிவில் இடம்பெற்ற குழப்பங்கள் காரணமாக, தமிழ் அரசுக் கட்சியின் எதிர்




– என்.கண்ணன் –

காலம், யாராலும் கணிக்க முடியாத நிலை இப்போது உருவாகியிருக்கிறது. தமிழ் அரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கின்ற இந்தப்

> “ தமிழ்த் தேசிய அரசியலை வழிநடத்தும் பிரதான கட்சியாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியே இருந்து வந்திருக்கிறது. உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்கு எடுத்த முடிவினால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், உடைத்து, தன்னையும் சிதைத்து விட்டு நிற்கிறது அந்தக் கட்சி. ”

பிரச்சினை எவ்வளவு காலத்துக்கு நீடிக்கப் போகிறது என்று எதிர்வுகூற முடியாது. நீதிமன்ற வழக்கிற்குள் சென்றுவிட்ட இந்தப் பிரச்சினையை, அப்புக்காத்து அரசியல்வாதிகளால் கூட இலகுவில் வெளியே கொண்டு வந்து விட முடியாது போலவே தோன்றுகிறது.

பிரச்சினைகளை நோண்டி நோண்டிப் பெரிதுபடுத்துவதில் தான் கவனம் செலுத்தப்படுகிறதே தவிர, அதனை தீர்த்து வைப்பதற்கான அக்கறை கட்சியின் உயர்மட்டத்தினர் மத்தியில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், தமிழ் அரசுக் கட்சியின் இந்தநிலை தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஒரு பெரும் பின்னடைவு என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் போன்ற, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களே, இதனைக் கூறியிருக்கிறார்கள்.

முக்கால் நூற்றாண்டாக தமிழ்த் தேசிய அரசியலில், சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து வலுவாக நிலைபெற்றிருந்த கட்சியின் இத்தகைய நிலையை தமிழ் மக்களும் விரக்தியுடன் தான் பார்க்கின்றனர்.

ஆனால் கட்சியைத் தூக்கி நிறுத்தி, வலுவான நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று நினைக்க வேண்டிய- செயற்பட வேண்டிய- அந்தக் கட்சியின் தலைவர்கள், அவ்வாறான பொறுப்புடன், எதிர்பார்ப்புடன் செயற்படுகிறார்களா என்ற நியாயமான சந்தேகங்கள் எல்லோர் மத்தியிலும் இருக்கிறது.

போருக்குப் பின்னரான காலகட்டத்தின் தமிழ்த் தேசிய அரசியலை உற்று நோக்கினால், அது தேய்பிறை போலவே இருந்து வந்திருக்கிறது.

இன்றைக்குத் தமிழ்த் தேசிய அரசியலில் வலுவான- எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய- எல்லோராலும் மதிக்கப்படக் கூடிய ஒரு தலைமைத்துவம் இல்லை. தமிழ் மக்களை ஒன்றுபடுத்தி வழிநடத்தக் கூடிய ஒரு அரசியல் கட்டமைப்பு இல்லை. குறைந்தபட்சம் தேர்தல் நோக்கங்களுக்காக வேனும், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளை ஒன்றிணைக்க கூடிய கட்சியோ, தலைமைத்துவமோ கூட கிடையாது. இது எதனை உணர்த்துகிறது? கடந்த 15 ஆண்டுகளில் தமிழ்த் தேசிய அரசியல், சரியான திசையில் வழிநடத்தப்படவில்லை என்பதை உணர்த்துகிறது.

எதிரிகளாலும், அஞ்சக் கூடிய கட்டமைப்புகளைக் கொண்டிருந்த தமிழ்த் தேசிய அரசியல் இன்றைக்கு, கைகொட்டிச் சிரிக்கின்ற நிலைக்கு கொண்டு வந்து விடப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்களின் பிரநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு உலகினாலும் அங்கீகரிக்கப்பட்டது. வரவேற்பு அளிக்கப்பட்டது. இன்றைக்கு அந்தக் கூட்டமைப்பையும் போட்டு உடைத்து விட்டு, இருந்த மிகப்பெரிய கட்சிக் கட்டமைப்பையும் நீதிமன்றத்தில் கொண்டு போய் நிறுத்தி விட்டு, நிற்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைக்கு தமிழ்த் தேசிய அரசியல் தலைவர்கள் தான் காரணம். தமிழ் மக்கள் இன்றைக்கு நம்பிக் கையிழந்து போயிருப்பதற்கு, மாற்று அரசியல் குறித்து அவர்கள் எட்டிப் பார்க்கும் நிலை ஏற்பட்டிருப்பதற்கு வேறெவரையும் குற்றம் சாட்ட முடியாது.

இப்போது கூட எல்லாம் முடிந்து போய் விடவில்லை. இருக்கின்ற கட்டமைப்புகளை காப்பாற்ற வேண்டும். அவற்றைப் பலப்படுத்த வேண்டும். அடுத்த கட்டத்துக்கு தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுப்பதற்கான வழிகளை தேட வேண்டும். இதனைச் செய்வதற்கு காலத்துக்காக காத்திருக்க முடியாது. சிங்கள அரசுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறமுடியாது என்று உணர்ந்து கொண்ட பின்னர், தந்தை செல்வா, தமிழ்த் தேசிய அரசியலை வலுவாக முன்னெடுப்பதற்காக, ஜி.ஜி பொன்னம்பலத்தின் வீடு தேடிச் சென்று கூட்டணி அமைத்துக் கொண்டார்.

அதுபோன்று, தன்னலம் கருதாமல், தன்முனைப்பு இல்லாமல், சிந்திக்கத்தக்க செயற்படத்தக்க தலைவர்களால் தான், இனிமேல் தமிழ்த் தேசிய அரசியலை வலுப்படுத்த முடியும். காப்பாற்ற முடியும். இல்லையேல், கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்குத் தான், தமிழ்த் தேசிய அரசியலும் தள்ளப்படும். இது கேட்பதற்கு கடினமானதாக, நம்புவதற்கு கடினமானதாக இருக்கலாம். ஆனால், அத்தகைய யதார்த்தம் தவிர்க்க முடியாதது. அவ்வாறானதொரு நிலையை மாற்றும் வல்லமை தமிழ்த் தலைமைகளுக்கு இருக்கிறது. அதனை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.



அ.கிருபாகரன்
- அதிபர் -

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.



We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | |
|---|---|
| சுன்னாகம் | 021 224 2022 |
| நெல்லியடி | 021 226 0700 |
| பருத்தித்துறை | 021 226 1100 |
| ஆவரங்கால் | 021 222 6688 |
| சித்தங்கேணி | 021 225 2500 |
| சாவகச்சேரி | 021 227 0700 |
| பூநகரி | 021 320 1818 |
| முழங்காவில் | 021 300 6544 |
| விஸ்வமடு | 021 320 1515 |
| மன்னார் | 023 225 1656 |
| கிளிநொச்சி | 021 228 5505 |
| வவுனியா | 024 222 7777 |








இப்பத்திரிகை 07.06.2024 அன்று அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, அச்சிட்டு வெளியிடப்படுகிறது.